செந்தமிழ்ச் செல்வி



20 ஆம் ஆண்டு நிறைவு விழா

சிறப்புமலர்



அரசு...

சிலம்பு-ருச] வள்ளுவர் ஆண்டு-உ௦க௦ ஐப்பசி, Nov. '79 [பரல்-ரு.

'செந்தமிழ்ச் செல்வி'

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

உள்ளுறை

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருச	திருவள்ளுவர் ஆண்டு உ௰௧௦, ஐப்பசி நவம்பர் 1979	பரல் ௫

மறைமலையடிகள் நூல்நிலைய

20 ஆம் ஆண்டு நிறைவுவிழாமாட்சி

'மறைமலை' தமிழ்மலை; தனித்தமிழ்மலை; மறைத்தமிழ் உணர்ந்த மறையாமலை; எதிர்ப்புக்கும் தாக்குதற்கும் மலையாது நின்று நிமிர்ந்தோங்கிய மாண்மலை!

மறைத்தமிழ் மலையின் திருப்பெயர் விளங்க அமைந்தது 'மறைமலையடிகள் நூல்நிலையம்' அது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அரவணைப்பில் இயங்கி வரும் அறநிலையம்! வள்ளலார் தம் ஒன்பதாம் அகவையில் 'உலகெலாம்' என அடியெடுத்து உரையோதி விரித்த உயர் மாளிகையாகிய 'வள்ளலார் திருமாளிகை' யிலே அமைந்தது! மனிதர்காள்! இங்கே வம்; கனிதந்தால் கனி உண்ணவும் வல்லிரோ?' எனக் காதலால் அழைத்து, அறிவு நலம் அருளும் சுவடிச் சாலையாகத் திகழ்கிறது. அச் சாலையின் இருபான் ஆண்டு எழுச்சி விழா; தன் இனிய பணிகளை எண்ணிப் பார்த்து—எவ்வெவ்வழிகளால் இன்னும் பணிகளை விரிவாக்கலாம் என எண்ணிப் பார்த்து—ஏறு நடையிட்டுச் செல்ல எடுக்கப் பெற்ற பெருவிழா!

காலையில் 'வள்ளலார்—அடிகளார்' விழா; மாலையில் நூல் நிலைய இருபான் ஆண்டு நிறைவு விழா. பழம் பெருமை 'மயிலை'க்கு ஒரு புதுப் பெருமை வள்ளல் மெய்யப்பர் எழுப்பிய இராசேசுவரி திருமணமண்டபம். மெய்யப்பர்க்கு (திரைப்படச் செல்வர் மெய்யப்பச் செட்டியார்) மெய்யப்பர்மேல் (சிவபெருமான்மேல்) மெய்க்காதல்! மெய்க்காதல் ஆட்டி வைக்காதா? ஆடல் பெருமானை ஆங்கு எழுந்தருளச் செய்து ஆட வைக்கிறது! ஆம்! "குனித்த புருவம்—கொவ்வைச் செவ்வாய்—குமிண்சிரிப்பு—பனித்த சடை-

எடுத்த திருவடி'' திகழக் கூத்தப் பெருமான் ஆடுங்கோலத் திருவரங்கம் கண்டார் திருவரங்கர் திருத்தம்பியார் திரு. வ. சு தேர்ந்து கொண்ட அரங்கத் தேர்ச்சியின் அருமை பெருமைக் குரியதாயிற்று !

மண்ணின் சிறப்புக்கு விண்ணின் சிறப்பே அடிப்படை என் பதை எவரே அறியார்? மண் சிறக்க வாழ்ந்த 'வள்ளலார்—மறை மலையடிகளார்' விழாவுக்கு 'வான்சிறப்பே' வரவேற்பாளியாக வாய்த்தது! வள்ளலார் திருவருள் உள்ளம்போல், மறைமலையார் தனித்தமிழ்ப் பொழிவுபோல் தண்மழை வைகறை தொட்டு நண் பகல் வரை பொழிந்தது.

திருமண்டபத் திருவாயிலில் நின்றும் உலாவியும், வரு வோரையெல்லாம் 'வருக வருக' என வரவேற்றுக் கைகூப்பி அழைத்துச் சென்று அமர்த்தினர் அருமை உடன்பிறந்தார் இருவர். அவர்கள் கழகப் பொதுமேலாளர் திரு. இரா. கலியாண சுந்தரர்; மறைமலை அடிகளார் நூல்நிலைய நூலகர் திரு. இரா. முத்துக் குமாரசாமி ஆகியோர். அரங்கில் நின்று வரவேற்றுச் சந்தனமும் 'உரோசா' மலரும் தந்து பூரித்தார், கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள்.

இசைப்புலவர் திரு. மு. சு. புண்ணிய கோடி அவர்கள் உள்ளம் உருக 'விழிக்குத்துணை ஒளி, மொழிக்குத்துணை முருகன்' என இன்னிசையால் இறைவணக்கம் பாடினர். கழக ஆட்சியாளர் பெரியவர் வ.சு. பேரன்பு பெருக்கெடுக்க வரவேற்றார். திரு ஏ.எம். சுவாமிநாதன் ஐ. ஏ. எசு. அவர்கள் தலைமை தாங்கி விழாத் தொடக்கவுரை விழுமிதாய் நிகழ்த்தினர். டாக்டர் திரு மா. நன்னன், திருமதி கலாதாக்கர், திரு. சிலம்பொலி செல்லப்பன், கவியோகி திருமிகு சுத்தானந்த பாரதியார், புலவர் திரு. இரா. இளங்குமரன் ஆகியோர் சொன்மாரி பொழிந்தனர்.

முற்பகல் 10. 30 மணியளவில் தொடங்கிய விழா. நூலகர் திரு. இரா. முத்துக் குமாரசாமி அவர்கள் நலமார்ந்த நன்றியுரை யுடன் நண்பகல் 1. 30 மணிக்கு நிறைந்தது.

பிற்பகல் 5 மணி அளவில் நூலக 'இருபான் ஆண்டு நிறைவு விழா'த் தொடங்கியது. அருட்பா இசையரசி குருவாயூர் பொன்னம் மாள் அவர்கள் தேன்மாரியெனத் தித்திக்கும் இசையால் ஒருமணிப் பொழுது அவையோர் கூட்டுண்ணத் தமிழிசை பாடினர்.

மாலை ஆறுமணிக்குள் அரங்கம் நிரம்பி வழிந்தது. மேடை நிறைவுவிழாச் செம்மல்களால் பொலிவுற்றது. மேனாள் உயர்மன்ற நடுவர் திரு. சு. மகராசன் அவர்களின் சீரார்ந்த வரவேற்புரை,

செழும்பாகாய் இனித்தது. மேதகு தமிழக ஆளுநர் 'பிரபுதாசு பட்டுவாரி' அவர்கள் மறைமலையடிகளார் நூல்நிலையப் பணி மாட்சியிலே சொக்கிப் போய்ச் சுவை கூட்டி விழாவைத் தொடங்கி வைத்தார். உயர்மன்ற நடுவர் மேதகு எம். எம். இசுமாயில் அவர்கள் தகுதிமிக்க தலைமையுரை ஆற்றினர். தவத்திரு மறைமலையடிகளார் திருப்படத்தைப் பேரறிஞர் அண்ணு தொழிற் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திருமிகு பி. சிவலிங்கனுர் திறந்துவைத்து உரையாற்றினுர்.

டாக்டர் உளுந்தூர்ப் பேட்டை திரு சண்முகம், திரு. பி. ஏ. மோகனராசன், திரு. தே. ஞானசுந்தரம் ஆகிய அறிஞர் பெருமக்கள் நூல்நிலையப் பணிநலம் பாராட்டி அணிமிகப் பொழிவு செய்தனர். அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் "நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும் ஆனந்தத் தேன் சொரியும்" விழாமலரை வெளியிட்டு விருப்பரு உரையாற்றினர். மேலும் கழக நூலாசிரியர் புலவர் இரா. இளங்குமரன் கழக நூல் வெளியீட்டுக்குச் செய்து வரும் பணிநலம் பாராட்டிஅவர்களுக்குக் 'கழக இலக்கியச் செம்மல்' என்னும் பட்டமும் கழகநூல்விற்பனைப் பகுதித் தலைமையர் திரு. சி. த. செல்வராசு, கழக நூல் கட்டடப் பகுதித் தலைமையர் திரு. கோ. பார்த்தசாரதி ஆகிய இருவர் பணி நலங்களையும் பாராட்டி அவர்களுக்குக் 'கழகப் பணிவலவன்' என்னும் பட்டமும் அமைச்சரவர்களால் வழங்கப்பெற்றுப் படாங்களும் போர்த்தப் பெற்றன. கழகப் பணிவலவர் இருவர்க்கும் தனித்தனி ரூ. 501/- பொன் முடிப்பு வழங்கப்பெற்றது.

விழாவில் பங்கு கொண்டு சிறப்பித்த பெருமக்களுக்கெல்லாம் தக்காங்கு நயனுர்ந்த நன்றியுரை வழங்கினுர் கழகப் பொது மேலாளர் திரு. இரா. கலியாண சுந்தரர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விழாமேடையிலேயே மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்காக ரூபா 1000 நன்கொடை வழங்குவதாக உரைத்து, அவையோர் அன்பை வாரிக்கொண்டார். அம் மேடையிலேயே கினற்றுக் கடவுத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திருமிகு கந்தசாமி அவர்கள் வழியே ரூபா 1000 நன்கொடை கிடைத்தற்கும் ஊக்குவித்து உருப்படுத்தி உவந்தார். நாட்டுப் பண்ணுடன் விழா இனிது நிறைவு பெற்றது.

அறிவறிந்த பெருமக்கள் கூடிய கூட்டம் பேரமைந்த சான்றோர் பெருகிய அவையம்; அதன்கண் பெருகியோடிய சொற் பெருக்குத் தேனெனப் பாலெனச் சுவைப்பொருளாகியது. அச் சுவைப் பொருளைத் தனித்தனி மாந்தி இன்புறுக.

—இரா. இளங்குமரன்

மறைமலையடிகள் நூல்நிலைய
20ஆம் ஆண்டு நிறைவு விழா

மறைமலையடிகள் நூல்நிலைய 20ஆம் ஆண்டு நிறைவு விழா 4-11-79 ஞாயிறு அன்று, சென்னை, மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில், காலை மாலை இரு வேளைகளிலும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அறநிலையங்களில் ஒன்றாகிய தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் சார்பில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முற்பகல் விழா வள்ளலார்-அடிகளார் விழாவாகவும், பிற்பகல் விழா மறைமலையடிகளார் நூல்நிலைய 20ஆம் ஆண்டு நிறைவு விழாவாகவும் நடைபெற்றன.

வள்ளலார் - அடிகளார் விழா :

இசைப் புலவர் மு. கு. புண்ணியகோடி அவர்களின் இறை வணக்கப் பாடல்களுடன் விழா தொடங்கிற்று. விழாவிற்கு வந்திருந்த பெருமக்கள் அனைவருக்கும் சங்கச் செயலாளர் செந்தமிழ்ச்செல்வர் தாமரைத்திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவிற்குத் தமிழரசு நிதித்துறை இணைச் செயலர் திரு. ஏ. எம். சுவாமிநாதன், ஐ. ஏ. எசு. அவர்கள் தலைமை தாங்கினார். டாக்டர் மா. நன்னன், திருமதி கலா தாக்கர், சிலம்பொலி செல்லப்பன், தவயோகி சுத்தானந்த பாரதியார், புலவர் இளங்குமரன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

வரவேற்புரை :

தாமரைச் செல்வர் அவர்கள் நிகழ்த்திய உரையின் சுருக்கம்:

"மறைமலையடிகள் நூல்நிலையத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று இங்கு நடைபெறுகிறது. இந்த நூல்நிலையத்திற்குத் தோற்றுவாயாக இருந்தவர் இருவர். அவ் விருவர் திருவுருவப் படங்களும் இங்கே இருக்கக் காண்கிறீர்கள். ஒருவர் திருவாளர் தி. செ. விசுவநாத பிள்ளை அவர்கள். அவர்கள் 1920ஆம் ஆண்டிலே சைவ சித்தாந்தக் கழகத்தைக் கூட்டுப் பங்கு நிறுவனமாக ஏற்படுத்த பத்துரூபா கொண்ட நூறுபங்குகட்கு 1000 ரூபா கொடுத்துதவியவர்கள். அடுத்து என்னுடைய தமையனார் திருவரங்கம் பிள்ளை அவர்களாவார். அவர்கள் 1914ஆம் ஆண்டில் கொழும்பில் இருந்தபோது மறைமலையடி

களாரைக் கொழும்பிற்கு வரவழைத்து மூன்று திங்கள் வைத்திருந்து அவர்களுக்குப் பெரும் பொருள் திரட்டிக்கொடுத்தார்கள். என்னுடைய தமையனார் அவர்கள் தாம் ஈட்டிய பொருளிலே புத்தகங்கள் வாங்கிக்கொண்டே இருந்தார்கள். நூலின் அருமை அறிந்து அவர்கள் அப்படி வாங்கிச் சேர்த்த நூல்கள்தாம் இப்படியொரு நூலகம் அமையக் காரணமாயின.

ஒரு கூட்டுப் பங்கு நிறுவனம், மறைமலையடிகளார் நூல் நிலையம் போன்ற ஒரு நூல்நிலையத்தை நிறுவி நடத்துவது ஓர் அரிய பணியாகும் என்று நூல்நிலையம் பற்றி அறிந்த பெருமக்கள் அனைவரும் கூறுகிறார்கள். யார் எந்தத் துறையிலே படிக்க வேண்டுமென்றாலும் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்றாலும் அதற்குரிய நூல்கள் அங்கே கிடைக்கின்றன. மற்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட ஒரு நூல்நிலையம் இல்லை என்பதை அறிஞர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். இனி, இந்த விழாவிற்குத் தலைமைதாங்க இசைந்த என் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய முன்னாள் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. சை. வே. சிட்டிபாபு உடல்நலக் குறைவினால் வர இயலாமற் போனதால் அந்த இடத்தை நிரப்பத் தமிழக அரசு நிதித்துறை இணைச்செயலர் திரு. ஏ. எம். சுவாமிநாதன், ஐ. ஏ எசு. அவர்கள் வந்திருக்கிறார்கள். அல்லாமல் இந்த விழாவிலே சிறப்புரை ஆற்றும் பொருட்டு டாக்டர் நன்னன் அவர்கள், திருமதி கலா தாக்கர், சிலம்பொலிசெல்லப்பன் அவர்கள், கவியோகி சுத்தானந்த பாரதியார், மதுரைப் புலவர் இரா. இளங்குமரன் ஆகிய அறிஞர் ஐவர் வந்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் பெரும் ஆற்றல் வாய்ந்தவர்கள், அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன்.

அடுத்து இந்த விழாவிலே புலவர் இளங்குமரன் அவர்கட்குக் 'கழக இலக்கியச் செம்மல்' என்னும் பட்டங்கொடுக்க முடிவு செய்துள்ளோம். அஃது இங்கே வழங்கப்பெறும்.

அல்லாமல் 1933ஆம் ஆண்டு முதல் கழக நூல் விற்பனைக்கு அரிய பணியாற்றிவரும் திரு. சி. த. செல்வராசுக்கும், கட்டடப் பகுதியில் பணியாற்றிவரும் திரு கோ. பார்த்தசாரதிக்கும் 'கழகப் பணி வலவன்' என்னும் பட்டத்தினையும் வழங்க இருக்கிறோம். ஒவ்வொருவருக்கும் ரூ. 501 அன்பளிப்பாக நன்கொடை வழங்கவும் முடிவு செய்துள்ளோம்.

இந்த விழாவிற்குத் தலைமை தாங்கிச் சிறப்பாக நடத்தித் தருமாறு திரு. ஏ. எம். சுவாமிநாதன் அவர்களையும், மற்றும் உரையாற்ற வந்திருக்கும் அறிஞர் பெருமக்களையும் இவ் விழா

வினைச் சிறப்புற நடத்தித்தர வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். சுவாமிநாதன் ஐ. ஏ. எசு. அவர்களின் தலைமை உரை :

இவ் விழா வள்ளலார்—மறைமலை அடிகளார் விழாவாக நடத்துவது மிகவும் பொருத்தமாக எனக்குத் தோன்றுகிறது. வேற்றுமொழி கலவாமல் தமிழால் முடியுமா என்று நினைத்துக் கொண்டிருந்தவர்களின் ஆணவத்தை அடக்கித் தமிழால் முடியும் தமிழரால் முடியும் என்று எழுதியும் பேசியும் காட்டிய பேரருளாளர் மறைமலையடிகளாராவார். அவர்கள் சைவத்தையும் தமிழையும் ஒருங்கிணைத்து நமக்களித்தவர்களாவார்.

பல மொழிகளையும் கற்றுணர்ந்து தமிழ் சிறந்த மொழி என்று ஒருவர் சொல்வாரானால் திட்டமாக அதற்கு மதிப்பு உண்டு அந்த அளவுக்கு நல்ல கருத்தாழமுள்ள நூல்களை இயற்றியவர் மறைமலையடிகளார். 'கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக' என்று சொன்னவர் வள்ளலார். அவருடைய வழியிலே நடந்தவர் மறைமலையடிகளார்.

இந்த நூல் நிலையம் பொழுதுபோக்குக்காகப் படிப்பவர் வருகின்ற நூல் நிலையமாக இல்லாமல் ஆராய்ச்சிக்காகப் படிப்பவர்கள் அதிகமாக வரும் நூல் நிலையமாக இருக்கின்றது. வெளிநாட்டாரும் இங்கு வந்து ஆராய்ச்சி செய்கிறார்கள். இத்தகைய அரும்பெரும் தொண்டாற்றுகின்றது இந் நூல் நிலையம். இதற்குத் தலைமைதாங்கி நடத்தும் தாமரைச் செல்வர் சுப்பையா பிள்ளை அவர்களின் அடியொற்றி நடந்துகொண்டிருக்கின்ற நூலகர் திருவாளர் முத்துக்குமாரசாமி அவர்களின் அரும்பெரும் தொண்டினாலேயே இந்த நூல் நிலையம் நன்றாக நடந்துகொண்டு வருகிறது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சைவமும் தமிழும் தழைத்தோங்கத் தமிழ்கூறு நல்லுலகத்திற்கு அருந்தொண்டாற்றி வருகிறது. அவர்கள் எல்லாரையும் நாம் எல்லாரும் கூடி வாழ்த்தி அவர்களுடைய தொண்டு வாழ்க!—வளர்க! என்று கூறுவது நமது கடமையாகும்.

டாக்டர் மா. நன்னன்,
சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்

பாராட்டுரை வழங்கிய டாக்டர் நன்னன் அவர்களின் உரைச் சுருக்கம் :

இந்தியாவில், தமிழகத்தில், சென்னையில் உள்ள எந்த நூலகத்தையும் இதற்கு ஈடுசொல்ல முடியாது என்று—

நானில்லை—நம் நாட்டவர்களும் அல்லர்—வெளியிலிருந்து வந்த அறிஞர் பலர் குறிப்பிட்டிருப்பதை அறிகின்றபோது திட்டவட்டமாக, இந்த அமைப்பிற்கு இந்தப் பெருவிழா ஏற்புடைத்து என்பதை எல்லாரும் ஏற்க முடியும். அந்த நூலகம் அமைந்திருக்கின்ற பாங்கு, அங்குச் செல்கின்றவர்களுக்கு வழங்குகின்ற உதவிகள் ஆகியன வியந்து போற்றுதற்குரியன. இத்தனைக்கும் காரணராயிருக்கும் நூலகர் மதிப்பிற்குரிய திரு. முத்துக்குமாரசாமி அவர்கள்தாம் என்று சொன்னால், அது மிகையாகாது.

நாம் இருந்து எழுதுவதற்கு, குறிப்பெடுப்பதற்கு, ஆராய்வதற்கு வசதியான இடத்தை ஒதுக்கித்தந்து, எப்படிப்பட்டவர்களையும், மனங்கோணாதபடி நடத்துகின்ற அந்தச் சிறப்பு வேறு எங்கே நாம் காண முடியும்? மாமியார் வீட்டுக்குச் செல்பவர்கட்குத் தரப்படுவது போன்ற நல்ல வரவேற்பும், நல்ல உதவியும் அங்கே தரப்படுகின்றன.

இஃது ஒரு தனித்தன்மை வாய்ந்த சிறப்புடைய நூலகமாக விளங்குகின்றது தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட அருமையான நூலகம் இருக்கிறதே, அதற்கு நாம் என்ன உதவி செய்யமுடியும் என்று நினைக்கின்றவர் இல்லை என்பதும் தெரிகிறது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் நூல் விற்பனை குறைந்து விட்டது. அதனுடைய வருவாயிலிருந்து - ஆதாயத்திலிருந்து- இந்த நூல் நிலையத்தை நடத்தவேண்டும். எது எதற்கோ செலவு செய்பவர்கள் இந்த நாட்டிலே இருக்கின்றார்கள். செலவு செய்யாதவர்கள் இல்லை. இந்த நூலகத்திற்குப் பொருள் முட்டுப்பாடு இருக்கின்றது என்பதைப் பார்க்கின்றபோது உண்மையிலேயே தமிழ்படித்தவர்கள் - தமிழ்ப்பற்றாளர்கள் - இளைஞர்கள் ஆகியோர் வருந்த வேண்டும் என்றுகூடச் சொல்லமாட்டேன் - நாணவேண்டும் என்று சொல்லத் தோன்றுகிறது.

இப்படிப்பட்ட நல்ல செயல்களுக்கு ஊக்கம் கொடுக்கிறவர்கள் இல்லை. அதற்கு என்ன காரணம் என்றால், பெரியார் அவர்கள் தமிழனுடைய குறைபாட்டிற்கு ஒரு காரணத்தைச் சொல்வார்கள். அஃதாவது, தமிழர்கள் ஒரு சிறந்த செயலைச் செய்யமாட்டார்கள்; செய்கிறவர்களையும் செய்ய விடமாட்டார்கள். நன்றி இல்லாத சமுதாயம் இஃது என்று அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள்.

ஆகவே இப்படிப்பட்ட ஓர் அருமையான அமைப்பு தனிப்பட்ட ஒருவர்-அல்லது ஒரு நிறுவனம் இந்த அமைப்பினை நடத்தி வருகிறதென்றால் எல்லாரும் ஆளுக்கொரு சிறு உதவி செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். ஏதோ ஒரு காரணத்தால்

இப்படிப்பட்ட ஒரு நூலகம் இல்லாமற் போகுமானல் - போகாது- போகக்கூடாது - போகவிடமாட்டோம். அப்படிப் போய்விடுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். இப்படிப்பட்டதொரு நூலகத்தை உருவாக்கமுடியுமா? அது வள்ளலாராக இருந்தாலும் சரிதான் - மறைமலையடிகளாராக இருந்தாலும் சரிதான் - பெரியாராக இருந்தாலும் சரிதான்—இந்தச் சமுதாயத்திலே செய்த உழைப்பை வேறு ஒரு சமுதாயத்திலே செய்திருப்பார்களானல் பயன் அதிகமாக விளைந்திருக்கும்.

மறைமலையடிகளாருடைய தொண்டு இந்த நாட்டிலே வெற்றி பெற்றிருக்கிறது. மறைமலையடிகள் தமிழைத் தடுத்தாட் கொண்டிருக்கிருர்கள். மறைமலையடிகள் தோன்ருமலிருந்தால் தமிழ் என்ன நிலைமையிலே இன்று இருந்திருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்த்தால் உண்மையிலேயே நமக்குத் திகில் உண்டாகும். தமிழ் அழிந்தே போயிருக்கும்.

இந்த மறைமலையடிகளாருடைய நூலகத்திற்கு என்னுடைய தந்தையாரின் நினைவுநாள் வருகின்றபோதெல்லாம், என்னல் முடிந்த - நான் ஓர் ஆசிரியன் - 25 வெண்பொற்காசுகளை என்னுடைய சிறு பங்காகக் கொடுக்க விழைகிறேன். அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அருமையான நல்வாய்ப்பினை எனக்குக் கொடுத்ததற்காக அவர்களுக்கு எனது மனம் திறந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திருமதி கலா தாக்கர்,

சென்னை வைணவ மகளிர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்

திருமதி கலாதாக்கர் அவர்கள் தம்முடைய பாராட்டுரையில்,

"வள்ளலாருடைய அடிச்சுவட்டில் வாழ்ந்த மறைமலையடிகளார் தம்முடைய வாழ்க்கையில் பெரும்பொழுதை நூல் சேர்ப்பதற்காகச் செலவழித்திருக்கிருர். சில ஆண்டுகளாகத்தான் அந்த நூலகத்தின் தொடர்பு எனக்கிருக்கின்றது. எனக்குச் சில நூல்கள் கிடைக்கும், சில கிடைக்காமற் போகும். ஆனல், அந்த நூல் கிடைத்தவுடன், தொலைபேசியாலோ, அஞ்சலட்டை மூலமோ எனக்குத் தெரியப்படுத்தி, அந்த நூலைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவிக்கும் நினைவாற்றலும் பொறுப்பும் நிறைந்திருக்கின்ற அந்த நூலகத்தின் நூல்கரை வாழ்த்துகின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்கு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நூலகத்திற்குப் பாராட்டுகளைத் தெரிவித்து அது மேன்

மேலும் வளர வேண்டுமென வாழ்த்துகின்றேன்,'' என்று குறிப்பிட்டார்.

திரு. சிலம்பொலி செல்லப்பன்,

தமிழக அரசு தமிழ் வளர்ச்சித்துறைச் செயலர்

சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் தமது பாராட்டுரையில்,

''என்னைப் பொறுத்தவரையில் சென்னையிலே உள்ள மறக்க முடியாத ஒரு தொலைபேசி எண் இருக்கிறதென்று சொன்னால், அது 21003 என்பதே யாகும். காரணம் என்ன வென்றால், ஒரு தலைப்பைக் குறித்து, என்ன என்ன நூல்களை நாம் படிக்க வேண்டும் என்ற ஐயம் எழுந்தால் அந்தத் தொலைபேசியினைச் சுழற்றி நாம் கேட்போமானால், அந்தத் தொலைபேசியிலிருந்து ஒரு குரல் வரும். இன்ன இன்ன நூல்களைப் படியுங்கள்; இந்த இந்த நூல்களில் இன்ன இன்ன இடங்களில் இன்ன இன்ன கருத்துக்கள் இருக்கும் என்று தெளிவாகத் தரக்கூடிய ஒரு நல்லவரை—வல்லவரை, இந்த நூலகம் பெற்றிருக்கிறது என்பதை எண்ணி எண்ணி மகிழ்ச்சி அடைகிறோம்—பூரிப்படைகிறோம்.

'' பல இடிபாடுகளுக்கிடையே இந்த நூலகத்தைக் காத்து வருகின்ற நூலகர் அவர்கள், உள்ளபடியே தமிழ்நாட்டின் பாராட்டுக்குரியவர். அவருக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

'' வள்ளலாரும் மறைமலையடிகளாரும் தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகக் கொண்டவர்கள். பாட்டு நடையிலே வள்ளலாரைச் சொன்னால், உரைநடையிலே அடிகளாரைச் சொல்ல வேண்டும். இருவருமே வடமொழி அறிந்தவர்கள். வடமொழியில் வல்லவர்கள். ஆனால், தமிழே மேல் என்று எண்ணியவர்கள். ஆகவே, இந்த விழாவைக் கொண்டாடுகின்ற நேரத்தில், தமிழ் மொழியைக் காப்போம்—வளர்ப்போம் என்ற உறுதியை எடுத்துக்கொள்வோம்'' என்று குறிப்பிட்டார்.

புலவர் இரா. இளங்குமரன்,

மதுரை மு. மு. உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்

புலவர் இரா. இளங்குமரன் அவர்கள் தமது பாராட்டுரையில்,

''வள்ளலார் பெருமகனுர் புகழையும் விரும்பாதவர். ஓதாது உணர்ந்த பெருமகனுர் வள்ளலார். ஓதி உணர்ந்த பெருமகனுர் மறைமலேயடிகளார். இந்த இரண்டு பேரும் இணைந்திருக்கின்ற அருமை இருக்கின்றதே, அதனைத் திருவருள் செயல் என்றே சொல்லலாம்.

''வள்ளலார் தாம் படிப்பதற்கென்று பள்ளிக்கூடம் வைத்து அங்குத் திருக்குறளை என்றும் ஓதுவிக்கச் செய்தார். நாம் இன்று மகளிர் பள்ளிக்கூடம் என்கிருேம், முதியவர் பள்ளிக்கூடம் என்கிருேம். அதைத் தொடங்கி வைத்த பெருமகனுர் வள்ளலார் ஆவார்கள்.

'' ஆபால விருத்தப் பள்ளியை ஏற்படுத்தியவர். ஆபாலர் - ஆடுமாடு மேய்க்கும் சிருர்கள். விருத்தர் - முதியவர்கள். இருபதுக்கு மேற்பட்டவர் பயில்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். இந்தத் திட்டத்தை ஏற்பாடு செய்தவர் வள்ளலார். அவர் கல்வியில் ஆழ்ந்த பற்றுடையவர்.

''வள்ளலார்—மறைமலேயடிகளார் ஆகிய இந்த இரண்டு பெருமக்களையும் இந்தப் பொழுதிலே நினைப்பதிலே மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் இருவரையும் நினைவு கூர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டதற்காகப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். எங்குங் காணப்படாத கருவூலம் மறைமலே அடிகளார் நூலகத்திலே இருக்கக் காண்கிறேன். அறிஞர்களெல்லாம் கூட்டுண்ணும் இடமாக அஃது இருக்கிறது ''

கவியோகி சுத்தானந்த பாரதியார்,
சென்னை யோகசமாசத் தலைவர்

அடுத்துப் பேசிய கவியோகி சுத்தானந்த பாரதியார் மறைமலேயடிகளாரின் மாண்புகளை ஒரு பாடலாகவே பாடிவிட்டு, வள்ளலார்க்கும் அடிகளார்க்கும் உள்ள ஒப்புமைகளை விளக்கினுர். வள்ளலார் 'ஜாதிஜாதி' என்று சொன்ன நாட்டில் 'ஜோதிஜோதி' என்று சொல்லிச் சாதிகளை ஒழிக்கப் பாடுபட்டார் என்றும், மறைமலேயடிகளாரும் வள்ளலார் வழியில் நின்று சமரச சன்மார்க்கத்தை (பொது நிலேக் கழகத்தை) நிலேநிறுத்தப் பாடுபட்டார் என்றும் கூறினுர்.

மறைமலேயடிகள் நூல்நிலேய நூலகர் திரு. இரா. முத்துக் குமாரசாமி நன்றி கூறக் காலே நிகழ்ச்சிகள் இனிது முடிந்தன.

———

மாலை நிகழ்ச்சிகள்

மாலை 5 மணியளவில் அருட்பா இசைஅரசி திருமதி குருவாயூர் பொன்னம்மாள் அவர்கள் அருளிசையுடன் தொடங்கியது. அவர் பொழிந்த இசை மழையில் நூலகத்தைப்பற்றிய பாடல்:

அறிவாலயம் நூலகம் அதன் அனுபவங்கள்
    தரும் பயன்கள் அனேகம்
திறமையும் இலக்கியம் பெருமையும் அளிக்கும்
    சிந்தனை வளங்களைச் சந்ததமும் வளர்க்கும் (அறி)
மனிதரைப் புனிதனாய் மாற்றும் கெட்ட
    மனத்தின் இருள் நீக்கி மாண்பை யுண்டாக்கும்
கனிமையிலும் இனிமை சேர்க்கும் நல்லநூல்
    வருஞ் சஞ்சலங்க ளெல்லாம் போக்கும் (அறி)
வித்தகக் கலைஞானம் விஞ்ஞானம் தத்துவம்
    விண்ணியல் மண்ணியல் நுண்ணிய பொருளியல்
புத்தறி வெல்லாம் புத்தகங்கள் வழங்கும்
    புதியதோர் சமுதாயம் படைத்திடத் துலங்கும் (அறி)
நவரச கலைகளை விளக்கும் நல்லநாடகம்
    காவியம் கவிதைகள் கொடுக்கும் நூலகச்
சுவையிலில்லா இன்பம் வேறெங்கே கிடைக்கும்
    மறைமலை அடிகளார் நினைவாலயம் நூலகம். (அறி)

நூல்நிலைய 20 ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் விழாக்குழுத் தலைவர் நீதிபதி எஸ். மகராசன் அவர்கள் வரவேற்றுப் பேசிய வரவேற்புரை:

மறைமலையடிகளை 40 ஆண்டுகளுக்கு முன்னால் திருநெல் வேலியில் கண்டேன். அவருடைய பேச்சைக் கேட்டேன். பேச் சென்றால் குயிலே பேசுவதுபோல் இருந்தது. மறைமலையடிகள் ஊருக்கு வருவதென்றால் 100 வெண்பொற்காசுகள் கேட்பது வழக்கம். அது திருநெல்வேலிக்காரர் ஒருவருக்கு வருத்தத்தைத் தந்தது. தமிழை அடிகள் விற்கிறார் என்று குற்றஞ் சாட்டினார். அடிகள் பேசும்போது நூல்களையெல்லாம் எப்படித் தாமே எழுதித், தாமே அச்சடுக்குவது, தாமே அச்சடிப்பது போன்ற வற்றைக் கூறினார். ஆயிரக்கணக்கான நூல்களை வாங்கிப் படித்துப் படித்து நூல்களை எழுதினேன். இந்த நூறு ரூபாவைப் பெரிதாகக் கூறுகிறார்களே என்றார். மூன்று மணி நேரம் அவர்கள் பேச்சைக் கேட்டுவிட்டுக் குறைகூறியவர், அடிகள்

கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அப்பேர்ப் பட்ட மறைமலை அடிகள் அறிவில் ஓங்கி நின்ற மலை. படிப்பிலே சிறந்த ஒரு மலை அப்பேர்ப்பட்டவர்கள் நினைவாக இந்த நூல் நிலையம் நிறுவப்பட்டது. 4000 புத்தகங்களை அவர்கள் இந்த நூல்நிலையத்திற்கு நன்கொடையாக அளித்தார்கள். அவர் களுடைய பேச்சு ஒவ்வொன்றும் ஐம்பது புத்தகங்களைப் படித்த பலனைக் கொடுக்கும்.

மறைமலையடிகள் நூல்நிலையத்திலுள்ள புத்தகங்களைப் படித்துப்பார்த்தால் ஒவ்வொரு புத்தகத்திலும் அடிகளாருடைய அடிக்குறிப்பு இருக்கும். தலைப்பக்கக் குறிப்பு இருக்கும். பக்க வாட்டில் குறிப்பு இருக்கும். அதாவது அந்த நூலாசிரியர் சொல்லுகிற கருத்தைத் தாம் வாங்கித் தமக்கு ஒத்த கருத்துக்க ளிருந்தால் அல்லது எதிர்க்கும் கருத்துக்கள் இருந்தால் அவற்றையும் சொல்லி இன்னும் புலவர் பலர் கூறுவதை யெல்லாம் அவர்கள் அப்படிக் குறிப்பு எழுதி வைப்பார்கள். ஆகையால் அந்தப் புத்தகங்களை வாங்கிப் படிப்பதில் எனக்குத் தனி மகிழ்ச்சி இருக்கும்.

சாமுவெல் டெய்லர் காலரிட்ஜ் என்ற அறிஞனிடம் அவனுடைய நண்பர்கள் தாங்கள் வாங்கிய புதிய புத்தகங்களை 'நான் முந்தி, நீ முந்தி' என்று முந்திக்கொண்டு கொடுப்பார்கள். ஏனென்றால் அவன் அந்தப் புத்தகங்களில் அவ்வளவு குறிப்பு களைப் படிக்கும்போதே எழுதிவிடுவானும். மறுபடியும் அந்தப் புத்தகங்களை நண்பர்கள் படிக்கும்போது ஒரு புத்தகத்தைப் படிப்பது மூன்று புத்தகங்களைப் படிப்பதுபோல இருக்குமாம். அதுபோல மறைமலையடிகளுடைய புத்தகங்களிலெல்லாம் குறிப்புக்களை நாம் காணலாம்.

அதோடு பேராசிரியர் ரங்காசார்யாவின் 500 நூல்களை வாங்கிச் சேர்த்திருக்கிருர்கள். இவையெல்லாம் வைத்துக் கொண்டு தொடங்கப்பெற்ற இந் நூல்நிலையத்தில் இன்று ஏறத் தாழ 35,000 நூல்கள் உள்ளன என்று எண்பதாண்டு இளைஞ ரான திரு. சுப்பையா பிள்ளை கூறுகிருர். 200, 300 ஆண்டு களுக்கு முன் அச்சிடப்பெற்ற நூல்களையெல்லாம் இந்த நூலகத்தில் பார்க்கலாம். ஒவ்வொன்றையும் இவர்கள் எப்படிப் பெற்ருர்கள் என்பதற்குத் தனி வரலாறே உள்ளது. 1554 இல் லிஸ்பனில் முதல் தமிழ் நூல் அச்சிடப்பெற்றது. 1578 அக். 20இல் கொல்லத்தில் அச்சிடப்பெற்ற 'தம்பிரான் வணக்கம்' (Doctrina Christam) வியன்னுவில் ஒரு குறுநில மன்னரிட மிருந்து—பின்னர் 1951 இல் அமெரிக்காவிலுள்ள ஹார்வார்டு

பல்கலைக் கழகத்தில் சேர்ந்தது. 1952இல் வெளியான அந்தப் பல்கலைக்கழக இதழில் அந்த நூலின் வரலாறு வெளியிடப் பெற்றுள்ளது. இவ்வாறு சுப்பையா பிள்ளை அவர்கள் பலருக்குக் கடிதங்கள் எழுதி ஒவ்வொன்ருகச் சேர்த்துள்ளார்கள். இவற்றைப் பற்றித் தனித்தனி வரலாறே எழுதலாம்.

இவ்வளவு அரிய நூல்களைப் படமெடுத்துப் பாதுகாத்து வைக்கவேண்டும். மெக்ரோபிலிம் செய்து காப்பாற்றவேண்டும். இதைத் தனிமனிதனுல் செய்யமுடியாது.

பிரெஞ்சு நாட்டில் 14 ஆம் நூற்ருண்டில் பிரபுக்கள் ஆட்டுக்குட்டியின் தோலில் விலை மிக்க நீல மையைக்கொண்டு, ஆயிரம் பொற்காசுகளைக் கொண்டு எழுத்தர்களைக்கொண்டு எழுதச்செய்து மைக்கேல் ஆஞ்சுலோ, லியோனுர்டோ டாவின்சி போன்ற ஓவியர்களைக் கொண்டு சித்திரங்களைத் தீட்டி ஒரு புத்தகம் படியெடுக்க ஒரு லட்சம் பொன் செலவழிப்பார்கள். இந்த நூல்நிலையத்திலுள்ள நூல்களையெல்லாம் காப்பாற்ற ஒரு இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது.

உங்களையெல்லாம் அழைத்திருப்பதெல்லாம் ஆற்றல் மிக்க சுப்பையா பிள்ளையைப் போற்றுவதற்கோ, அல்லது முத்துக் குமாரசாமியைப் போற்றுவதற்கோ அல்ல. அவர்கள் போற்றுவதற்கு உரியவர்கள்தாம். அண்மையில் திருவள்ளுவரைப் பற்றி சாகித்ய அகாதெமிக்கு ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதிக் கொடுத்துள்ளேன். அதற்கு வேண்டிய நூல்களை முத்துக் குமாரசாமியிடம் கேட்டேன். டாக்டர் கிரால் எழுதிய 'திருக்குறள்' என்ற நூலையும் போன்டேன் எழுதிய பிரெஞ்சு திருக் குறளையும் அவர்கள் கொடுத்து உதவினுர்கள்.

ஏதாவது ஒரு பொருளைப்பற்றித் தொலைபேசியில் அவர்களிடம் கேட்டால் இதில், இவை இருக்கின்றன என்று எதையும் பாராமலே சிரித்துக்கொண்டே கூறுவார்கள். புன்முறுவலோடு கூறுவார்கள். வேண்டிய நூல்களை உடனே தருவார்கள். மிகுந்த மகிழ்ச்சியோடு பல புத்தகங்களை எடுத்துக் கொடுப்பார்கள். அவர்களே நன்கு கற்றவர்கள். ஆற்றல், ஆசை, ஆர்வம் எல்லாம் அவர்களிடத்திலே இருக்கின்றன. அப்பேர்ப்பட்டவர்களையெல்லாம் போற்றவேண்டியதுதான்.

இங்கு அரசாங்கச் செல்வாக்குடையவர்கள் இருக்கிருர்கள். அமைச்சர்கள்—நீதிபதிகள்—ஆளுநர்—செல்வர்கள் போன்ற அனைவரும் இங்கு இருக்கிருர்கள். அனைவரும் நூல்நிலையத்

திற்கு வேண்டிய பொருளுதவியைச் செய்ய முன்வரவேண்டும். நூல்நிலையத்தைப் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள். ஆனால், பணம் மட்டும் வரவில்லை.

இங்கே இளமையிலேயே அரசியல் சூறுவளியில் சிக்கிக் காந்தியப் பாதையில் வாழத் தொடங்கிய ஆளுநர் அவர்கள் இருக்கிறார்கள்.

'தமிழுக்கு யோகம்' என்று கூறுமளவிற்குத் தமிழில் பேரீடுபாடு கொண்டு தலைமை நீதிபதிப் பதவியில் அமரவிருக்கும் மாண்புமிகு நீதிபதி அவர்கள் இருக்கிறார்கள்.

எத்தனையோ பட்டங்கள் பெற்றவர்களுக்கில்லாத நேர் பார்வையுடைய அமைச்சர் வீரப்பன் அவர்கள் வந்திருக்கிறார்கள். உண்மைகளை நேரடியாகப் பார்க்கும் திறன் அவர்களிடம் இருக்கிறது. அவர்கள் தமிழுக்காகப் பல காரியங்களை ஆற்றத் தயாராக இருக்கிறார்கள். அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோடிக்கணக்கில் நம் அரசினர் தமிழுக்குச் செலவிடுகிறார்கள். உலகத் தமிழ் மாநாட்டிற்கே ஒரு கோடி செலவழிக்கப் போகிறார்கள். அதில் ஒரு நூறாயிரம் ரூபாவை இந்த நூலகத்திற்கு ஒதுக்கலாகாதா என்று கேட்டு உங்களை எல்லோரையும் வரவேற்கிறேன்.

அடுத்து விழாவைத் தொடங்கி வைத்துத் தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தொடக்கஉரை ஆற்றினார் :

I have the greatest joy in particpating in the celebrations of 20 years of this good library. As we all know library is the true temple of Goddess Saraswathi. Whenever we enter the portals of the library, I think, most of us forget our problems and other worries of the world. We are pushed into a very pious atmosphere while we see the books. By the vision of the books, one's heart gets filled with joy and inspiration. It is more so in a library where there are rare books and rare works. A good book always moulds a man's character and hence it is better to have as many good books as

possible. But, everybody can't afford to have a good library in his home, however rich he may be. His collection will only be according to his taste but a good library would possess many good books and also a few rare books. Therefore the existence of a library for 20 years is a matter for joy. When I visited this library I was informed by many readers with great joy and affection that it has been very useful to them. I must therefore congratulate our Subbiahji for the good service he is doing for the maintenance and promotion of this library.

I remember when I was a young boy a library to have been opened near my house. The first good book I saw was a big volume with a number of pictures. It was nothing but 'The Arabian Nights' and I read it from first to last page continuously for three days and then I started travelling in dreams. I was only ten then and still I could remember the impression it created in my mind. And it is this sort of experience, I think, every one would experience when he sees a good book. We, as human beings, often come to decision in haste or form opinion about people by hearsay. But when we read good books, we get balance of mind and judicious approach. Then we think twice before acting. Therefore library which is a good home for good books has always its effect on the human life.

Most of us are only confined to the reading of newspapers and not good books. There is a general complaint from good authors that their books are not in demand. I have visited many states but I find here people having taste for reading good books. There are more readers compared to other states and, therefore, I must say that we find here people to be of different types, different cultures and different habits. And, as I often say, Tamil language has a rich


tradition and therefore the foundation for Tamils, is as strong as granite. Nobody can shake it. There are unnecessary fears and rumours that Tamil is being disturbed. Nobody can shake that strong granite rock since it has a strong foundation. Not only from the point of view of language and culture but in every aspect Tamil is strong. The people of Tamil Nadu are noted for their simplicity, good life, God loving nature and so on. They are largely due to the language and culture of the Tamils. I am very happy that our friend is doing useful and purposeful work for the betterment of the Tamil language and Tamilians. I wish him all success.

We have always to recognise that the character of a nation builds its prestige and boosts its image in the world map. Character of a nation depends only on the character of the people and therefore a good language medium which is capable of building the character of people is to be given due recognition and importance. Therefore a library which has that relevance and importance has to be appreciated. I can tell you only after entering into Raj Bhavan, I have not been a regular visitor to the library. But, of course, I had had occasions to visit many libraries here and outside the state, only as a visitor. Visits were formal. But prior to coming to Raj Bhavan, I used to visit the library and sit there hours together and read some good books or magazines. The atmosphere of a library itself is very exhilarating. It gives great happiness and satisfaction to one's soul.

I hope this library, as it has done very good service in the past, will do much more in the future and help the promotion of our character and culture. I wish the library and the great dedicated worker and also others behind it a bright future. So I am very happy to inaugurate this very auspicious occasion.

மறைமலையடிகள் நூல்நிலையம்
20ஆம் ஆண்டு நிறைவுவிழா
[4—11—1979]

வள்ளலார் - அடிகளார் விழா
(முற்பகல் நிகழ்ச்சி)



திரு. ஏ. எம். சுவாமிநாதன், ஐ. ஏ. எசு. அவர்கள்
தலைமையுரை ஆற்றுதல்



விழாவிற் கலந்துகொண்ட அறிஞர் பெருமக்கள்


1. திருமதி. கலாதாக்கர்
2. திரு. டாக்டர் மா. நன்னன்
3. திரு. ஏ. எம். சுவாமிநாதன், ஐ ஏ.எசு.
4. தவத்திரு. சுத்தானந்த பாரதியார்
5. திரு. வ. சுப்பையா
6. திரு. சிலம்பொலி செல்லப்பன்
7. திரு. இரா. இளங்குமரன்
8. திரு. இரா. முத்துக்குமாரசாமி

நூலக 20ஆம் ஆண்டு நிறைவு விழா

(மாலை நிகழ்ச்சி)



அருட்பா இசையரசி
குருவாயூர் பொன்னம்மாள் அவர்கள் இசையரங்கு



விழாவின் மாலை நிகழ்ச்சிக்கு வருகை தந்த
மாண்பமை
நீதிபதி செங்கோட்டு வேலன், நீதிபதி மகராசன்,
நீதிபதி மோகன், தலைமை நீதிபதி இசுமாயில்




நீதிபதி மகராசன் அவர்கள் வரவேற்புரை ஆற்றுதல்



தமிழக ஆளுநர்

மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள்


தொடக்கவுரை ஆற்றுதல்




மாண்புமிகு அமைச்சர்

இராம வீரப்பன் அவர்கள்


விழா மலரை வெளியிட்டு உரை நிகழ்த்துதல்



மறைமலையடிகள் திருவுருவப்படத்தின்முன்
விழாவில் கலந்துகொண்ட பெருமக்கள்



அமைச்சர் மாண்புமிகு இராம வீரப்பன் அவர்கள் விழா மலரை மாண்பமை தலைமை நீதிபதி எம். எம். இசுமாயில் அவர்களிடம் வழங்குதல்



மாலை நிகழ்ச்சியின் தலைவரும் சொற்பொழிவாளர்களும்

1. திரு. தே. ஞானசுந்தரம்
2. திரு. பி. சிவலிங்கம்
3. திரு. உளுந்தூர்பேட்டை சண்முகம்
4. மாண்புமிகு இராம. வீரப்பன்
5. மாண்பமை தலைமை நீதிபதி இசுமாயில்
6. யோகி சுத்தானந்த பாரதியார்
7. திரு. வ. சுப்பையா
8. நீதிபதி மகராசன்
9. திரு. பி. ஏ. மோகனராசன்


மாண்புமிகு அமைச்சர் இராம. வீரப்பன் அவர்கள் பட்டமளிப்பு



புலவர். இரா இளங்குமரன் அவர்கள்
'கழக இலக்கியச் செம்மல்' என்னும்
பட்டம் அளிக்கப்பெறுதல்



திரு. சி. த செல்வராசு
'கழகப் பணிவலவன்' என்னும்
பட்டம் அளிக்கப்பெறுதல்



திரு. கோ. பார்த்தசாரதி
'கழகப் பணிவலவன்' என்னும்
பட்டம் அளிக்கப்பெறுதல்

தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் உரையின் சுருக்கத் தமிழாக்கம் :

"இந்த நூலகத்தின் 20 ஆண்டு நற்பணிகளின் விழாவில் பங்கு கொள்வதில் யான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நூலகம் என்பது கலைமகள் உறையும் கோயில். நூலகத்திற்குச் சென்று நூல்களைக் காணும்போது நம்முடைய கவலைகளெல்லாம் தீர்ந்து உள்ளத்திற்கு நிறைவும், ஊக்கமும் ஏற்படுகின்றன. அதிலும் அரிய—கிடைத்தற்கரிய நூல்களைக் கொண்ட இத்தகைய நூலகம் மனிதனுடைய பண்பாடுகளையே மாற்றி அவனைப் புது மனிதனாக்க வல்லது. ஆகவே, எல்லாரும் அவர்கள் எவ்வளவு செல்வர்களாயிருப்பினும் தமக்கென நூலகம் அமைத்துக்கொள்ள முடியாது. இந்த நூலகத்தில் அவரவர்க்கு விருப்பமான நூல்கள் கிடைக்கும். இந்த நூலகத்தைக் கட்டிக் காத்துவரும் சுப்பையாஜி அவர்களை, அவர்தம் அரிய பணிகளுக்காகப் பாராட்டு கிறேன்.

நான் சிறுவனாக இருந்தபோது ஒரு நூலகத்தில் கண்டு களித்தது படங்கள் நிறைந்த அராபியக் கதைகளாகும். நூல்களைக் கற்பதினால் நாம் எதிலும் நியாய உணர்வினைப் பெற முடியும். ஒரு நல்ல நூலகம், ஒரு நல்ல அணிகலன்களின் கடைக்கு ஒப்பாகும். ஓர் ஊரில் ஒரு நல்ல நூலகம் இருக்கிற தென்றால் அங்கு நல்ல பண்பாடுள்ளவர்கள் வாழ்கிறார்கள் என்பது பொருள். அவ் வகையில் 'இந்த நூலகத்தில் நிறைய நூல்கள் இருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

நம்மில் அநேகர் இதழ்களைத்தாம் படிக்கிறார்களே தவிர நல்ல நூல்களைப் படிப்பதில்லை. ஆனால் மற்ற மாநிலங்களைவிட இந்த மாநிலத்தில் நூல்களைப் படிப்பவர் தொகை அதிகம். இங்குப் பல்வேறுபட்ட கலாச்சாரங்கள், பழக்க வழக்கங்கள் இருந்தபோதிலும், தமிழ் நல்ல வலுவான அடிப்படையுடையதா யிருக்கிறது. தமிழை யாராலும் அழிக்கவோ, அதற்கு ஊறு தேடவோ முடியாது.

ஒரு நாட்டின் பண்பாடுதான் உலகப் பண்பாட்டின் அடிப் படையாகும். அதுபோலவே, மக்களின் பண்பாடுகள்தாம் ஒரு நாட்டின் உயர்வுக் காரணமாகும். எனவே, இன்றைய நிலையில் நூலகத்தின் பங்கு மிகமிகத் தேவையான ஒன்று. நான் பல நூலகங்களுக்குப் போயிருக்கிறேன். சில சமயம் நூலகங்களில் அமர்ந்து நூல்களையோ இதழ்களையோ படிப்பதில் மன ஒருமைப்பாடு ஏற்படுகின்றது.

இந்த நூலகம் கடந்த காலங்களில் சிறந்த பணியாற்றி வந்திருக்கிகிறது. இனி வருங்காலத்திலும் இந் நூலகம் சிறந்த பணிகளாற்றி சிறக்கும் என்று நம்புகிறேன். இந்த நூலகத்தையும் இதனை இயக்கிவரும் தனக்கென வாழாப் பண்பாளரையும் வாழ்த்துகிறேன். இந் நூலக விழாவினைத் துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.''

விழாவை ஆளுநர் அவர்கள் தொடங்கி வைத்த பின் சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி மாண்பமை. எம். எம். இசுமாயில் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கி ஆற்றிய உரை :

மேதகு ஆளுநர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்களே, என் அன்புச் சகோதரர் மகாராஜன் அவர்களே, எண்பது வயது இளைஞர் சுப்பையா பிள்ளை அவர்களே இங்கே வந்திருக்கும் பெரியவர்கள், சகோதர சகோதரிகளே!

இன்றைய விழாவிற்குத் தலைமை வகிக்கும் பொறுப்பு எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நூல்நிலையம் ஒன்றி னுடைய இருபதாண்டு நிறைவினைக் கொண்டாடுவதென்பது சாதாரணமாகப் பார்த்தால் பெரிய காரியமென்று சொல்ல முடி யாது. நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் இவற்றினுடைய ஆயுள் மனிதனுடைய ஆயுளை விட நீண்ட ஆயுளுடையவை. ஒரு மனிதனுக்கு இருபது ஆண்டு என்றாலே நீண்ட காலம் என்று கூற முடியாது. அப்படி இருக்கும்போது நிலையாக இருக்கக் கூடிய ஒரு நிறுவனத்திற்கு 20 ஆண்டு என்பது நீண்டகாலம் என்று சொல்ல முடியாது. ஆனால் அந்த நூல்நிலையத்திலே இருக்கக்கூடிய நூல்களின் தன்மையைப் பார்த்து அது இந்த 20 ஆண்டுகள் இதுவரையிலும் பிழைத்து வந்ததே என்பதைப் பார்க்கும்போது அதிலே சிறப்பு இருக்கக்கூடும். இன்றைய நாளிலே மக்களுக்கு இருக்கின்ற வாசிக்கின்ற பழக்கம்; எத்தகைய நூல்களைப் படிக்க விரும்புகிறார்கள்—என்ன மாதிரி பத்திரிகை களைப் படிக்க விரும்புகிறார்கள்—எதை அவர்கள் விரும்பிக் கேட்கிறார்கள் என்று பார்க்கும்போது மறைமலையடிகள் நூல் நிலையம் 20 ஆண்டுகள் இருந்ததை நாம் பாராட்டத்தான் வேண்டும்; கொண்டாடத்தான் வேண்டும். இந்தக் காலத்தில் இருக்கின்ற படிக்கின்ற ருசி, சுவாரசியம் எல்லாம் மிக லேசான, இன்றைய வாழ்க்கையில் சர்ச்சைக்கு இடமான, சர்ச்சையில் மூழ்கியிருக்கின்ற நூல்கள், அல்லது வேறு விதமான நூல்கள் பார்த்தவுடன் உள்ளத்தையோ உணர்ச்சியையோ கிளறிவிடக் கூடிய உணர்ச்சியைந் தூண்டும் நூல்கள். இவைகளைப் படிக்க

வேண்டுமானல் எத்தனை ரூபாயாவது கொடுத்து வாங்கிப் படிக்கத் தயாராக இருக்கிருர்கள். அத்தகைய நூல்களை வைத் திருந்தால் தனிக்கட்டணம் கூட வசூலிக்கலாம்; நன்ருகப் பணம் சம்பாதிக்க முடியும். ஆனல், மறைமலையடிகளாரின் பெயரால் இயங்கி வருகிற நூல்நிலையம், அவர்களால் முதலில் உதவப் பட்டு அதன் காரணமாக இப்போது வளர்ந்து வருகிற நூல் நிலையம் அம்மாதிரியெல்லாம் இருக்கமுடியாது.

இந்த நூல் நிலையத்தின் தன்மை, இதனல் பிறர்க்குண்டா கும் பயன் பற்றி நானே அனுபவத்தில் தெரிந்திருக்கிறேன். வேண்டுமென்ற நூலை, எது தேவையோ அதை அங்கே பெறு தற்கு வாய்ப்பு இருக்கிறது. பிற இடங்களில் கிடைக்காத நூல்கள் எங்கெங்கோ நம் நாட்டை விட்டுத் தேடிப் போனல் கூட, தனி மனிதர்களிடம் தேங்கிக் கிடக்கிற நூல்களையெல்லாம் இந்த நூலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அந்த ஒரு வசதி இந்த நூலகத்தில் இருப்பது சென்னையிலுள்ள மக்களுக்கு ஒரு பெருத்த வசதியென்றுதான் சொல்ல வேண்டும். அது எல்லாம் பிற நாடுகளிலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் வருகின்ற வர்கள் தங்களுடைய ஆராய்ச்சிக்குத் தேவையான நூல்களை இந்த நூலகத்திலிருந்து எடுத்துக் கொள்கிருர்கள் என்பது இந்த நூலகத்திற்குப் பெருமை தேடித் தருவதாக இருக்கிறது.

சாதாரணமாக என்போன்ருர்களைச் சில சமயங்களிலே ஏதோ பேசக் கூப்பிடுகிருர்கள்; எழுதச் சொல்லுகிருர்கள், எதையாவது பற்றி. ஏதோ நீதிபதி என்றிருந்து விட்டாலோ- அல்லது மேடைமேல் எழுந்து நின்று இரண்டு சொல் பேசப் பழகிவிட்ட காரணத்தினலோ எதைப்பற்றி வேண்டுமானலும். எங்கு வேண்டுமானலும் பேசக்கூடிய தகுதி அவர்களுக்கிருக் கிறது என்று பலரும் நினைத்துக்கொண்டிருக்கிருர்கள். ஆனல், அவர்கள் ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றிப் பேசவோ, எழுதவோ வேண்டுமென்ற கட்டாயம் ஏற்படும்போது சங்கடம் வருகிறது. இதற்குத் தேவையான செய்தியை எங்கே போய்த் தேடுவது? யாரிடத்தில் கேட்கிறது? எங்கேயாவது நூல் நிலையத்தில் தேடவேண்டும். என் போன்றவர்கள் நூல் நிலையத்தில் போய்த் தேடுகின்ற அவகாசம் இல்லை. யாரை யாவது பிடிக்க வேண்டும். அப்படிப் பிடிப்பதற்கு எனக்கு அகப்பட்டவர் முத்துக்குமாரசாமி. ஏதாவது ஒன்றைப் பற்றிப் பொருள் தெரிந்துகொள்வதற்காக, விஷயத்தை அறிந்துகொள் வதற்காக நூல் ஒன்று வேண்டுமானல் அவர் தம்முடைய நூலகத்திலிருக்கிற நூல்களை மட்டுமல்லாமல் அது சம்பந்தமாக்

நூல்கள் எந்தெந்த நூல்கள் எவ்வெப்போது வந்திருக்கின்றன அவை இப்போது கிடைக்கின்றனவா இல்லையா, தம்முடைய நூலகத்தில் இல்லாவிட்டாலும் வேறெங்காவது இருக்கின்றனவா என்பதை உடனடியாகச் சொல்லக்கூடிய திறமை அவருக்கு இருக்கிறது.

மகாராஜன் அவர்கள் பொருத்தமாகப் பாராட்டிச் சொன்னார்கள். என் சொந்த அனுபவத்தில் சொல்லுகிறேன். பல அனுபவங்கள்; யாரையோ சொல்வார்கள்—கல்விக்கடல் என்று. நடக்கின்ற பல்கலைக் கழகம் என்றெல்லாம் சொல்வார்கள். முத்துக்குமாரசாமிக்கு இஃதெல்லாம் பொருந்தும். அந்த நூல்களிடையே அவர் உழன்று அந்த நூல் எந்தத் தலைப்பிலே யாராலே எப்பொழுது எழுதப்பட்டு எப்பொழுது பதிப்பிக்கப்பட்டு இருக்கிறது. அதே தலைப்பில் வேறு சில நூல்கள் யாரால் எழுதப்பட்டு இருக்கின்றன என்பதை உடனடி யாகச் சொல்லக்கூடிய திறமையும் தகுதியும் அவருக்கு இருப்ப தன் காரணமாக இந்த நூல்நிலையத்திலேயிருந்து நாங்கள் பெறுகின்ற சவுகரியம் பலவும் கொஞ்சநஞ்சமல்ல என்றுதான் சொல்ல வேண்டும். மற்ற நூலகங்களில் நாம் போனாலே ஏன் வந்தோம் என்று நினைப்பார்கள். ஆனால் இங்கே முத்துக் குமாரசாமி சம்பந்தப்பட்டவரை அவருடைய நகை நிறைந்த பேச்சை டெலிபோன் மூலமாகக் கூடக் கேட்கமுடியும். அவ்வளவு மிருதுவாகவும், தயங்குகின்றவர்கள்—பழகுகின்றவர்கள் பழகு வதற்குப் பொருத்தமாகவும் இந்த நூல்நிலையத்தில் அவர்களை வைத்திருக்கிறார்கள்.

இந்த நூல் நிலையத்தினுடைய தனிச்சிறப்பு என்னவென் றால் பெரும்பாலும் தமிழ் இலக்கியம் சம்பந்தமாகவும் தமிழ்மொழி ஆராய்ச்சி சம்பந்தமாகவும் இந்த நாட்டிலுள்ள சமய வளர்ச் சிக்குத் தமிழ் எந்த அளவிற்கு உதவிற்று. எந்த அளவிலே இடங்கொடுத்தது என்பது சம்பந்தமான எத்தனை நூல்கள் உண்டோ அத்தனையும் வைத்திருக்கிறார்கள். இவ்வளவு ஒரு சிறந்த நூல்நிலையத்தை இந்தச் சென்னை நகரிலே வைத்து இந்த எண்பது வயதுக் கிழவர் இன்றும் விடாப்பிடியாக நடத்திக் கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய ஊக்கத்தையும் உற்சா கத்தையும் பாராட்டுகின்றேன். அவர்கள் அற்புதமான பணியைச் செய்து வருகிறார்கள்.

அந்தக் காலத்தில் பேகன் சொன்னதாக இன்றும் நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். பயணத்திற்கு ஏற்ற துணை நூல்தான். இந்தக் காலத்து இளைஞர்கள் நூல்களினுடைய

உபயோகத்தைப் புரிந்து கொண்டார்கள் என்று சொல்ல முடியாது. ஒரு காலத்தில் நூல்களைப் படித்து ஞானத்தை வளர்த்துக்கொண்டு தாங்களே ஒரு ஞானப்பெட்டகமாக விளங்க வேண்டுமென்றிருந்த ஆர்வம் இப்போது இல்லை. இச் சூழலில், இந்தக் காலத்தில் அருமையான நூல்களை வைத்து ஒரு நூல் நிலையத்தைக் காப்பாற்றுவதென்பது பெருத்த காரியம். அதற்காக இந்தச் சுப்பையாபிள்ளை அவர்களுக்கும் முத்துக் குமாரசாமி அவர்களுக்கும் இந்தத் தமிழ் நாட்டிலுள்ள மக்கள் மாத்திரமல்லர் அறிவு வளர்ச்சியிலே ஆர்வம் கொண்டிருக்கிற அனைவரும் நன்றி செலுத்த வேண்டும்.

இத்தகைய நூல்நிலையம் ஊன்றி நிலவவேண்டுமென்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. அதற்கு வேண்டுமான உதவியை அனைவரும் செய்ய வேண்டும். அரசாங்கமும் உதவவேண்டும். பொது மக்களுக்கும் இதில் கடமை இருக்கிறது. பொதுமக்களுடைய வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் உதவியாக நிற்கிறதென்ருல் இதை வளரச் செய்வதற்கு முன்வர வேண்டும். சென்னையிலுள்ள வசதி படைத்தவர்கள், தொழிற் செல்வர்கள் நினைத்தால் ஒருவரேகூட ஒரு லட்சம் ரூபாய் கொடுத்துவிட முடியும். ஆனுல் அவர்களுடைய கவனம் இந்தப் பக்கம் திரும்பவில்லை. அது திரும்ப வேண்டும். அவர்களுடைய பணம் ஒரு நல்ல காரியத்திற்குப் பயன்படுகிறது என்ற மனநிறைவுடன் அவர்கள் பணம் கொடுக்க முன்வரவேண்டும். அவர்களெல்லாம் உதவுவதற்கு வாய்ப்பாகத்தான் இத்தகைய விழாக்கள் கொண்டாடப் பெறுகின்றன. இத்தகைய விழாவிலே தலைமை வகிக்கும் வாய்ப்பை எனக்களித்ததற்கு நன்றி கூறிக்கொண்டு நீங்களனைவரும் இந்த நூல்நிலையத்தால் பயன்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மறைமலையடிகளார் படத்திறப்பு :

மறைமலையடிகளார் திருவுருவப் படத்தினைத் திறந்துவைத்து அண்ணு தொழில் நுட்பப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் உயர்திரு பி. சிவலிங்கம் அவர்கள் ஆற்றிய உரைச் சுருக்கம் :

‘‘மறைமலையடிகளார் நூல்நிலையம் கடந்த 20 ஆண்டுகளாக மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இந்த நூல்நிலையத்தை நடத்தி வருகின்றது. ஒரு பதிப்பகம் ஒருநூல்நிலையத்தைநடத்திவருவதுஉலகத்திலேயே இதுதான் முதல் சாதனை. வேறு எங்கும் இம்மாதிரி கிடையாது

என்று திரு. சுப்பையா பிள்ளையவர்கள் சொன்னார்கள். இது வரவேற்கத்தக்கதாகும். மறைமலையடிகள் 1916 ஆம் ஆண்டிலேயே தனித்தமிழ் இயக்கத்தை ஆரம்பித்தார்கள். அந்தக் காலத்தில் படித்தவர்கள் தனித்தமிழ் பேசுவதற்குக் கூசுவார்கள். இக் காலத்தில் இளைஞர்களிடையே அரிய நூல்களைப் படிப்பதில் ஆர்வம் வரவில்லை. அறிவுவளர்ச்சிக்காக எதையும் அவர்கள் படிப்பதில்லை. இந்த நிறுவனத்தார் செய்துவரும் பணியை நான் மிகவும் பாராட்டுகிறேன். அவர்கள் எதிர்பார்த்தது கொஞ்சம் தான் - ஒரு லட்சம்தான் - அது அவர்களுக்குக் கிடைப்பதில் ஒன்றும் தடை இராது. இந்த நூல்நிலையம் மேன்மேலும் வளர வேண்டும் என்று விரும்பி வேண்டிக்கொண்டு, இந்த வாய்ப்பளித்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பாராட்டுரைகள் :

நூல் நிலையப் பணிகளைப் பாராட்டிச் சென்னைப் பல்கலைக்கழக நூலகர் திரு. பி. ஏ. மோகனராசன் அவர்கள் ஆற்றிய உரைச்சுருக்கம்:

திரு மோகனராசன் அவர்கள் பேசும்போது 1958 இல் மறைமலையடிகள் நூலகத்திறப்பு விழாவின்போது டாக்டர் அரங்கநாதன் அவர்கள் பேசியதன் சில பகுதிகளைப் படித்துக் காட்டிவிட்டுத் அந்தத் தீர்க்கதரிசி நினைத்ததை மறைமலை அடிகள் நூலகம் இன்றுவரை நடத்தி வருகின்றது என்று சொன்னார். அவர், மேலும் பேசுகையில்,

"நூலக வாயிலில் நுழையும்போது நடராசர் சிலை எவ்வாறு வாசகர்களை வரவேற்கிறதோ அப்படியே மேலே சென்றால் நூலகர் அவர்கள் வருவோரை அன்போடு வரவேற்கிறார் என்று கூறுகிறார் அரங்கநாதன். ஒரு நூலகர் என்ற முறையில் நான் இந்த நூலகரைப் பற்றிக் கூறவேண்டியது கடமை என்று கருதுகிறேன் உதாரணத்திற்கு, ஓர் ஆராய்ச்சி மாணவர் நூலகத்திற்கு வருகிறார் என்றால், அவரை வாருங்கள் என்று வரவேற்று - நாங்க ளெல்லாம் முத்து என்று சொல்லும் திரு. முத்துக்குமாரசாமி அவர்கள், ஆய்வு மாணவர் சொல்லி முடிப்பதற்குமுன் இந்த ஆய்வை இன்னார் இப்படிச் செய்திருக்கிறார் என்று கூறி, நீங்கள் இப்படிச் செய்யலாமே என்று கூறுவார்.

அவர் தொகுத்து வைத்திருப்பது போல மலர்கள் வேறு எந்த நூலகத்திலும் இல்லை. அவற்றில் இந்தக் கருத்தை இந்தக் கட்டுரையில், இந்தப் பேராசிரியர் எழுதியிருக்கிறார்

பார்த்தீர்களா என்று கேட்பார். எதற்குச் சொல்லுகிறேன் என்றால், ஆராய்ச்சியாளர்களின் நேரத்தை வீணாக்கக்கூடாது என்பது அவரது கருத்து.

ஆராய்ச்சி மாணவர்கள் சிலர் ஒரு நூலைப் படித்து முடிக்கும் முன் நேரமாகிவிட்டதென்று சொன்னால் ''ஐயா நான் இருப்பேன். படித்து முடித்தபின் கொடுங்கள்'' என்பார். இரவு நேரத்தில் தங்கிப் படிப்பதற்கு மேலே இடமிருக்கிறது. இதைவிடச்சிறப்பான சேவை வேறு எந்த நூலகத்திலும் இருக்க முடியாது.

இந்த நேரத்தில் என்னுடைய வேண்டுகோள் ஒன்று. சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் இன்னும் நூல்களை வெளியிட வேண்டும். நெல்லையில், மதுரையில், கோவையில், குடந்தையில் திருச்சியில் இதற்குக் கிளைகள் இருப்பதுபோல், தில்லி கல்கத்தா பம்பாய் போன்ற இடங்களிலும் ஏன் வெளிநாடுகளிலும் கிளைகள் ஏற்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப் பளித்தவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.''

பேராசிரியர் திரு. ஞானசுந்தரம் அவர்கள்:
சென்னை கந்தசாமி நாயுடு கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்.

''மறைமலை அடிகள் நூலகத்தை நினைக்கின்ற பொழுது சில பேருக்குச் சில தகுதிகள் இருக்கவேண்டும். ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கு நல்ல தோற்றமும் நல்ல குரலும் இருக்க வேண்டும் - மருத்துவ மனையிலே இருக்கின்ற செவிலியர்கள் கனிந்த முகத்தோடும் இன் சொல்லோடும் இருக்கவேண்டும். அதே போல் ஒருவர் நூலகராயிருந்தால் கனிவோடு நடந்து கொள்ளவேண்டிய இயல்பு இருக்க வேண்டும். அதனை அந்த நூலகத்திலே காணலாம்.

திரு. முத்துக்குமாரசாமி அவர்கள்மீது எனக்கு அன்பும் மரியாதையும் வரக் காரணமாக இருந்தது இந்த நூல்நிலையமே தான். நான் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கும்போதும் அடுத்து ஆசிரியனாக வந்த பின்னரும் இந்த நூல்நிலையத்தைப் பயன்படுத்தியிருக்கிறேன். நான் ஒரு தடவை இந்த நூலகத்திற்குத் தேடிப் போன திருவாசகம் பதிப்பொன்று கிடைக்கவில்லை. அப்போது இந்த நூலகரை எனக்குத் தெரியாது. நான் அவரிடம் சொன்னேன். 'ஐயா, எனக்கு இந்த நூல் வேண்டும்' என்று. ஒருவாரம் கழித்து எனக்கொரு கடிதம் வந்தது. அதில் ''ஐயா, நான் தேவக்கோட்டைக்குச்

சென்றிருந்தேன் - அங்கே, சுந்தர மாணிக்கயோகி எழுதிய திருவாசகஉரைகிடைத்ததுஎடுத்துவந்திருக்கிறேன். தங்களுக்குத் தேவையானல், நூலகத்திற்கு வந்து பயன்படுத்திக் கொண்டு போகலாம்'' என்று எழுதியிருந்தது. அப்பொழுதுதான் ஒரு நூலகருடைய பண்பு எப்படி இருக்கவேண்டும் என்பதை நினைத்துப் பார்த்தேன். நூலகர் வேலைக்கு அறிவு அதிகமாகத் தேவையில்லை என்று பலர் நினைக்கிருர்கள். ஏனென்ருல், நூல்களை அடுக்கி வைப்பதுதான் வேலை என்று நினைக்கிருர்கள். பல நூலகர்களுக்குத் தமிழே தெரிவதில்லை. சில நூலகர்க்கு எந்த நூல் எங்கு இருக்கிறதென்றே தெரியாது. ஆனல், இந்த நூலகத்திற்குப் போனல் நூல்களை எளிதில் எடுத்துப் படித்து விட்டு உடனே கொடுத்துவிடலாம்.

ஆகவே நூலகத்தைக் கட்டிக் காக்கவேண்டும் என்று தெரிந்த நூலகர் அங்கே இருக்கின்ருர். இதற்குக் காரணம் அவர் முன்னுள் பச்சையப்பன் கல்லூரி மாணவர். நீங்கள் என்னவோ தப்பாக நினைக்கிறீர்கள். இது பச்சையப்பன் கல்லூரியிலிருந்து கிடைத்த முத்து. எங்காவது ஒரு நூலகர் அதுவும் ஒரு பெரிய நூலகத்தின் நூலகர் வந்து மற்ெருரு நூலகரை முத்து எங்களுடைய சொத்து என்று பாராட்டி விட்டுப் போகிருர் என்ருல், இதைவிட இந்த நூலகத்தின் பணிக்கு வேறு நல்ல சான்று தேவை இல்லை என்று சொல்லி, சாதாரண ஆசிரியனுகிய நான் இந்த நூலகத்தின் வளர்ச்சிக்கு நிதி கொடுத்திருக்கிறேன். அப்படியிருக்க, இங்கே உள்ள வசதி படைத்தவர்கள் நினைத்தால் திட்டமாக, அரசினுடைய உதவியில்லாமலேயே இந்த நிறுவனம் வளரலாம்— அதற்காக அரசு உதவி செய்ய வேண்டாம் என்று பொருள் இல்லை. அரசு மக்களின் வரிப்பணத்தைத் தானே கொடுக் கின்றது. எத்தனையோ விஷயங்களுக்குக் கொடுக்கும் அரசு இந்த நூலகத்திற்கும் கொடுக்குமானல் என்னைப் போன்று அரசியலிலிருந்து விலகியிருக்கிறவர்கள்; பரவாயில்லை, இந்த அரசும் கொடுக்கிறது என்று சொல்லி இந்த நூலகத்தை வளர்க் கலாம் என்று சொல்லி, இந்த நிறுவனம் பல்லாண்டுகள் வாழ வேண்டும் என்றும் இந்த நிறுவனத்தின் தலைவராயிருக்கிற உயர்திரு சுப்பையா பிள்ளை அவர்களை இன்னும் ஒரு நூற்ருண்டு இரும் என்றும் வாழ்த்துகிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த நூலகர் நல்ல உடல் வளம்—மன நலம் பெற்றுப் பல்லாண்டுகள் வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன்.

டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
தமிழக அரசுப் பண்பாட்டுத்துறை இயக்குநர்

டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் அவர்கள் தமது பாராட்டுரையில் 'நூல்' என்னும் பொருள் பற்றி விரிவாகப் பேசிவிட்டு, நூலகர் திரு முத்துக்குமாரசாமி அவர்கள் செய்யும் பணி வெறும் நூல்களை அடுக்கிவைக்கும் பணியன்று. நூல்களை வெளியிடுவது மட்டுமன்று. செந்தமிழ்க்குச் செய்யும் ஒரு நிரந்தர மானதொண்டு. அந்தத்தொண்டு வளர்வதற்காகப் பாடுபட்டுவரு பவர்களுடைய விருப்பப்படி நடக்கும் பண்பாளராக விளங்குகிறார். அவர் மேலும்மேலும் நல்ல நூல்களைப் படிக்கவும், உலகளாவிய எண்ணம் வளரவும், தமிழ்ப் பண்பாடாகிய உலக நோக்கு வளர வும், நாம் இந்த நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் நூல் விற்பனை குறைத்துகொண்டு வருகிறது என்று சொன்னார்கள். அந்தச் சோர்வை நீக்குவது நம்முடைய கடன்; படித்தவர்களுடைய கடன்; பாமரர்களுடைய கடன்; அரசின் கடன் என்று கூறி, இந்த நூலகம் வளர நம்மாலான எல்லா உதவிகளையும் தர முயல்வோம் என்று கூறி, ஆட்சியாளராகிய ஐயா அவர்களுடைய ஆசியைப் பெற்று விடைபெறுகிறேன். வணக்கம்.

பட்டம் வழங்கல் :

மதுரைப் புலவரும், கழக நூலாசிரியருமான புலவர் இரா. இளங்குமரன் அவர்கட்குக் 'கழக இலக்கியச் செம்மல்' என்ற பட்டத் தையும், கழக நூல் விற்பனைப் பகுதியில் 1933ஆம் ஆண்டு முதல் பணியாற்றிவரும் திரு. தி. த. செல்வராசுக்கும், நூல் கட்டடப் பகுதியில் பல்லாண்டுகளாகப் பணியாற்றிவரும் திரு. கோ. பார்த்த சாரதிக்கும் கழகப்பணிவலவன் என்னும் பட்டங்களையும் சுற்றுலாத் துறைஅமைச்சர் மாண்புமிகு இராம வீரப்பன் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தனர். கழகப் பணிவலவர் இருவர்க்கும் தனித் தனியே ரூ 501-பணமுடிப்பு வழங்கப் பெற்றது.

மலர் வெளியிடுதல் :

மறைமலையடிகள் 20 ஆம் ஆண்டு நிறைவு விழா மலரை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் வெளியிட மாண்பமை உயர்நீதிமன்ற நடுவர் எம்.எம். இசுமாயில் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

மாண்புமிகு அமைச்சர் இராம வீரப்பன் அவர்கள்:

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மலரை வெளியிட்டு உரையாற்றியதன் சுருக்கம்:

"மறைமலையடிகள் பெயராலே நூல் நிலையத்தை 20 ஆண்டுகளாக நடத்திக்கொண்டிருக்கிறோம் என்பதை இந்தத் தமிழ் நாட்டு மக்கட்கு நினைவுபடுத்தும் வகையில் நிறைவு விழா நடத்தி, மலர் ஒன்றை—அதையும் மிகச் சிறந்த ஒரு நூலாக உருவாக்கி அதனை வெளியிடும் பணியை எந்தத் தகுதியும் இல்லாத என்னிடத்திலே ஒப்படைத்து, வாழ்க்கையிலே, என்னைப் போன்றவர்கள் இனிக் கற்கவேண்டிய நேரத்தில் கற்காமல் போனால் என்ன இழப்பு வரும் என்பதற்கு எடுத்துக் காட்டாக, இந்தத் தண்டனையை ஏற்றுக்கொள் என்பதுபோல வணக்கத்துக்குரிய பெரியவர் சுப்பையா பிள்ளை அவர்கள் இந்தப் பணியினை என்னிடத்திலே அளித்துள்ளார்கள் என்று நான் அவர்களுக்கும் பணிவோடும் வணக்கத்தோடும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் கூறியபடி அந்தத் தவற்றை என்னைப் போன்றவர் இனியும் செய்யாமலிருக்க இது உதவும் என்று ஏற்றுக்கொண்டு, அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆங்கிலப் பத்திரிகைகளை நடத்துவோரிடம் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். அவர்கள் பத்திரிகைகளை அமைச்சர்கள் மிரட்டுகிறார்கள் என்று திரித்து விடுகிறார்கள். அல்ல; இந்த மொழிக்காக—சமுதாயத்திற்காக வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். உங்கள் பத்திரிகைகளிலே, விஞ்ஞானக் கட்டுரைகளை 4 பக்கம் 6 பக்கம் என்று வெளியிடுகிறீர்களே, இந்தத் தமிழைப்பற்றி ஓர் ஆராய்ச்சி—விவாதங்கள் வெளியிட்டு எங்களுடைய தமிழ் எத்தகையது என்பதை ஆங்கிலேயருக்கும், உலகத்தோர்க்கும் அறிமுகப்படுத்த வேண்டாமா?

மறைமலையடிகளாரைப் பற்றி விவாதங்கள் மாண்புமிகு நீதிபதி இசுமாயில் அவர்கள் ஒருபுறத்திலே, மாண்புமிகு நீதிபதி மகாராசன் அவர்கள் ஒருபுறத்திலே, உட்காரவைத்துக்கொண்டு அவர்களுடைய பேச்சுக்களைப் பேசுகிறோம். இவற்றைப் பற்றியெல்லாம்—தமிழைப்பற்றியெல்லாம் ஒரு நான்கு பக்கம் வெளியிடக் கூடாதா? ஆங்கிலத்தைப்பற்றித் தெரிந்து கொண்டவர்கள் தமிழைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டாமா? அடுத்தடுத்துப் போட முடியாவிட்டாலும் மூன்றுமாதத்திற் கொருமுறையாவது

தமிழைப்பற்றிச் சொல்லுங்கள். அப்பொழுதுதான் இங்கு மறைமலையடிகள் நூல்நிலையம் நடத்துகின்ற சிறப்புத் தெரியும். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அறுபது ஆண்டுகளாக என்ன பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதுதெரியும்.

ஒரு கோடி ரூபா செலவு செய்து உலகத் தமிழ் மாநாடு நடத்தும்போது, இந்த நூலகத்திற்கு அரசு ஒரு நூறுயிரம் தரக் கூடாதா என்று மாண்புமிகு மகாராசன் அவர்கள் கேட்டார்கள். தயவுசெய்து நீங்களெல்லாம் அரசர்கள்—மன்னர்கள்— நீங்கள் இப்படிக் கேட்கக்கூடாது. 'கொடு' என்று அரசினிடத்திலே கேட்கவேண்டும். நீங்கள் உங்கள் உரிமையைக் கேட்கிறீர்கள். எதையும் கேட்டுப்பெறுகின்ற நிலையிலேதான் தமிழும் இருக்கிறது—தமிழ் வளர்ச்சியும் இருக்கிறது. முதலமைச்சருடைய காதுகளுக்கு எட்டுகிற முறையிலே பிரச்சினைகளை வைத்தால், அதுவும் குறிப்பாக, தமிழுக்காகப் பிரச்சினைகளை வைத்தால், அவர் அதனை முதலுரிமை கொடுத்துக் கவனிப்பார்.

மறைமலையடிகள் தாம் பேசுமாறு கூட்டங்களுக்கு அழைப்பு வந்தால் 100 வெண்பொற்காசுகள் வேண்டுமென்று கேட்டாரக ளென்றுல், அது அவருக்காக அன்று—மாடமாளிகைகள் கட்டு வதற்காக அன்று; நூல்களை வாங்கி, நூலகத்தை உருவாக்கி, அது இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும் என்பதற்காகத்தான் கேட்டார்.

அத்தகைய பெரியாருடைய பெயரிலே நூல்நிலையம் அமைத்துக் கட்டிக்காத்துவரும் பெரியவரை வணங்கி விடை பெறுகிறேன்.

அரசாங்கத்தின் சார்பில் முதலமைச்சரைக் கலந்து என்ன கேட்கவேண்டுமோ அதைக் கேட்டு உரிய நேரத்தில் செய்வேன் என்று உறுதி அளிக்கிறேன். அத்துடன், நான் மாத ஊதிய மாகப் பெறுகிற ரூ. 1000-ஐக் காணிக்கையாகத் தந்து விடை பெற்றுக்கொள்ளுகிறேன்.

நன்கொடை :

அடுத்துக் கிணற்றுக் கடவு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. வி. கந்தசாமி அவர்கள் நூல்நிலையத்திற்கு ரூ. 1000 நன்கொடை வழங்குவதாகக் கூட்டத்தில் அறிவித்து முன் பணமாக ரூ. 401/- வழங்கினர்.

நன்றிஉரை :

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பொது மேலாளர் திரு. இரா. கல்யாணசுந்தரம், பி. எசி. அவர்கள் வழங்கிய நன்றியுரை :

“மதிப்பிற்குரிய விழாத்தலைவர் அவர்களே பெருமதிப்பிற்குரிய அமைச்சர் பெருமான் அவர்களே, உயர்நீதிமன்ற நீதிபதியாக விளங்கித் தற்போது சட்டச்சொல்லாட்சிக் குழுவின் தலைவராக விளங்கும் நீதிபதி திரு. சு. மகராசன் அவர்களே, மற்றும் இங்கு வருகை தந்து நூலகத்தின் பணிகளைப் பாராட்டிய பெரு மக்களே,

இப்போது நன்றி நவிலல் கட்டத்தில் நான் வந்திருக்கின் றேன். மறைமலையடிகள் நூலகத்தை நடத்திவரும் சைவசித்தாந்த சங்கத்தின் சார்பில் நன்றிகூற முன்வந்துள்ளேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் நூலகத்தைப் பாராட்டும்பொழுது, தமக்குத் தகுதி இல்லாதது போலவும், ஆனால் அறிஞர் அண்ணாவின் பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்ற ஒரு காரணத்தினால் பாராட்ட முன்வந்ததாகவும் கூறினார்கள். அவர்கள் நூலகத்தைப் பாராட்டத் தகுதியுடையவர்கள் என்பதுடன் அவர்கள் பயிற்சி பெற்றதும் சிறப்பு எனவும் நாம் உணர்வோம். அதேபோன்ற ஒரு கருத்தினையும் நான் இங்கே சொல்ல விழைகின்றேன்.

நூலகம் என்று எடுத்துக்கொண்டால், அங்கே உள்ள நூல்கள் அனைத்தும் பட்டம்பெற்ற பட்டதாரிகளால் எழுதப் பெற்றவையல்ல என்பதை நாம் அறிவோம். தமிழில் எடுத்துக் காட்டிற்குப் பாரதிதாசன், மயிலை சீனிவேங்கடசாமி, புதுமைப் பித்தன், கல்கி, திரு. வி. க. போன்றவர்களின் நூல்களை ஆராய்ச்சி செய்து வருகிறார்கள் என்பதைக் கூறலாம். தமிழில் மட்டுமன்று, ஆங்கிலத்தில்கூட, பட்டம்பெறாத எத்தனையோ பேரறிஞர்கள் எழுதிய நூல்களைத்தான் மேற்பட்டம்பெற பி.எச்.டி; டி.லிட். போன்ற பட்டம்பெற அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் நம்முடைய நூல்நிலையத்தைப் பாராட்டியது மிகவும் பொருத்தமாகும். அவர்களுக்கு நூலகத்தின் சார்பிலும், கழகத்தின் சார்பிலும் என்னுடைய தனிப்பட்ட முறை யிலும் கழக ஆட்சியாளர் அவர்களுடைய சார்பிலும் கழக ஆட்சிக் குழுவினர் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து நிதி வேண்டுமென்று சொன்ன அளவிலே அமைச்ச ரவர்கள் தாமும் பேருள்ளத்துடன் ரூ. 1,000 வழங்க முன்வந்த தோடு தம்முடைய நண்பர் திருவாளர் கந்தசாமி எம்.எல்.ஏ. அவர்

களையும் ரூ. 1000/- நன்கொடை கொடுக்கச் செய்தது நூலக வளர்ச்சிக்கு ஒரு நல்ல அறிகுறி என்று கூற முற்படுகின்றேன். நன்கொடைகளுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

இப்பொழுது நிதி வேண்டும், நிதி வேண்டும் என்று சொன்னேமே தவிர எவ்வளவு வேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லவில்லை. நூலக வளர்ச்சிக்கு ஒரு நூறுயிரம் அல்லது $1\frac{1}{2}$ நூறுயிரம் வரை தேவைப்படும். இந்த $1\frac{1}{2}$ நூறுயிரம் ரூபாயைத் தமிழக அரசே கொடுக்கலாம். மைய அரசிலும் இதுபோன்ற திட்டங்கள் இருக்கின்றன. தமிழக அரசு பரிந்துரைக்கும் திட்டங்கட்கு மைய அரசு மூன்றில் இரண்டு பகுதி கொடுத்து வருகின்றது. இந் நேரத்தில் ஒன்றினைக் கூற விரும்புகின்றேன். அதனைக் குறிப்பிடுவதால் அமைச்சர் அவர்கள் மனம் புண்படமாட்டார்கள் என்று கருதித்தான் நான் அதனைச் சொல்ல விழைகின்றேன்.

மைய அரசு இந்த விண்ணப்பங்களை ஆய்வு செய்யு முன் தமிழக அரசு இதனை ஆய்வு செய்திருக்கிறதா என்று பார்க்கிறார்கள். பார்த்துத் தங்களுடைய பொருள் வசதிக் கேற்பப் பொருள் அளிக்கிறார்கள். இதேபோன்று மறைமலையடிகள் நூலகத்திற்கு 4 அல்லது 5 முறை நிதி உதவி பெற்றிருக்கிறோம். அண்மையில் கட்டப்பட்ட நூலக மாடிக்குக்கூட உதவி பெற்றிருக்கிறோம். தமிழக அரசு ஒரு பகுதியாகிய ஒரு தொகையை அளிப்பதாகக் குறிப்பிட்டு அனுப்பினால் மைய அரசினர் மிகவும் ஆர்வத்தோடு கொடுப்பதோடு எவ்வளவு தொகை அதிகமாகக் கொடுக்க இயலுமோ அவ்வளவு தொகை கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது. எனவே அந்த ஒருமுறையைப் பின்பற்றினால் கூடத் தமிழக அரசும், மைய அரசும் சேர்ந்து நமக்குத் தேவைப்படும் $1\frac{1}{2}$ நூறுயிரம் ரூபா கொடுத்துவிடலாம். இப்படிக் கொடுத்து விட்ட பிறகு, நன்கொடை தேவையில்லை என்று நான் சொல்லவில்லை. தற்போதைய தேவைகளை நிறைவு செய்யலாம். எனவே, அமைச்சர் அவர்கள் தக்க இடத்தில் தக்க நேரத்தில் உதவி செய்வார்களானால் இந்தப் பொருள வருவது ஒரு பெரிய காரியமன்று என்பதை நான் சொல்ல முன் வருகிறேன்.

அடுத்து வரவேற்புரை நிகழ்த்திய நீதிபதி மகராசன் அவர்கள் கழகம் நடத்தும் விழாக்களிலும், நூலகம் நடத்தும் விழாக்களிலும் முக்கிய பங்கேற்று அவ்வப்போது நமக்கு வேண்டிய அறிவுரைகளைக் கூறுகின்றார்கள். அவர்களுக்குக் கழகத்தின் சார்பிலும் நூலகத்தின் சார்பிலும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைமைதாங்கி இந்த விழாவைச் சிறப்பாக நடத்திக்

கொடுத்த உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி இசுமாயில் அவர்கள் நமது வணக்கத்திற்கும் பெருமதிப்புக்குமுரியவர்கள். அவர்கள் நூல் நிலையத்தைச் சிலவேளைகளில் பயன்படுத்துவதோடல்லாமல், சில நூல்களைத் தமக்கென்றே வாங்கி வருபவர்கள். உடனே உரிய தொகைக்குக் காசோலையினையும் வழங்கிவிடுபவர்கள். அதற்காகவும் அவர்கட்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் மதிப்பிற்குரிய சிவலிங்கம் அவர்கள் அடிகளார் படத்தைத் திறந்து வைத்து அரிய சொற்பொழிவாற்றினார்கள். மறைமலை யடிகள் கலைமன்றம் வாங்கத் துணைநின்ற அவர்கட்கும், அடுத்து உளுந்தூர்ப்பேட்டை டாக்டர் சண்முகம், சென்னைப் பல்கலைக் கழக நூலகர் திரு. மோகன்ராசு பேராசிரியர் திரு. ஞானசுந்தரம் ஆகியோர்க்கும் பாராட்டுரை வழங்கியமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்று காலை நடைபெற்ற கூட்டம் மழை காரணமாகக் குறைவாக இருந்தது. 1958ஆம் ஆண்டில் இந்த நூலகம் திறந்து வைக்கப்பட்டபோதும் மழை பெய்தது; இன்றும் மழை பெய்தது. இஃது ஓர் ஒற்றுமை.

மேதகு ஆளுநர் அவர்கள் இன்று கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றியதுபோல அன்றும் அந்நாள் ஆளுநர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். இது மற்றொரு ஒற்றுமை. ஆளுநர் அவர்கள் இவ் விழாவில் கலந்துகொள்வதற்கு உறுதுணையாக இருந்த அவர்தம் செயலர் திரு. என். சுப்பிரமணியம் அவர்கட்கும் நன்றி. கடைசியாக, ஆட்சியாளர் அவர்கள் விரும்புவதுபோல் இப்போது அமையும் மறைமலையடிகள் நகரில் மறைமலையடிகள் நூலகம் ஒன்று அமைய வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அதற்கான வசதிகளை அமைச்சர் அவர்கள் செய்துதர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன். அடுத்துச் சில ஆண்டுகளில் நூல்நிலையத்தின் வெள்ளிவிழா நடைபெறவிருக்கிறது என்பதையும் அவ் விழாவிற்கு இவ் விழா ஒரு முன்னோடியாகுமென்றும் தெரிவித்துக்கொண்டு விழாவிற் கலந்து சிறப்பித்த உங்களனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்."

நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நிறைவேறியது.

———

வாழ்த்துச் செய்திகள்

"இந்த நூலகம், சென்னையில், மற்ற நூலகங்களைவிடச் சிறப்பாக அறிஞர்க்குப் பயன்பட்டு வருகிறது. சைவசித்தாந்தக் கழகத்தின் பணிகளில் இது மேதக்கது!

இந் நூல்நிலையம் விளங்குதலும், வரவர மேம்படுதலும், உலகவரைப் பேரறிஞர் ஆக்குவதற்கு மிகவும் உதவியாகும். இதற்குத் தக்க நூலகரும் உதவியாளரும் இருக்கிறார்கள்.

இது, இவ் வுலகத்தார் அனைவரது ஆதரவுக்கும் உரியது; இதை வரவரச் செழிப்பாக வளர்ப்பது நல்லது; ஆட்சியாளர் இதற்காகவே நீண்டநாள் வாழ வேண்டும்."

—அருட்டிரு. அழகரடிகள், குருகுலம்.

ஈடு எடுப்பு இல்லாத நமது நூலகத்தின் 20ஆம் ஆண்டு நிறைவுவிழா தமிழக உயர்அற மன்ற ஞாயனுர் மாண்பு சான்ற எம். எம். இசுமாயில் அவர்கள் தலைமையில் நடப்பது, நூலகத்தின் எழிலாகும் எதிர்கால உயர்வைக் குறிக்கும் அடையாளமாகும். அறநெறியிலும், தமிழ்நெறியிலும் ஒருங்கே மேன்மையுற்று விளங்கும் அவர்கள் வாழ்த்து வளமை பொருந்தியதாகும். அவர்களுக்கு என் அன்பு சிவணிய வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, நூலகம் மேன்மேலும் ஓங்கிச் சிறப்பதற்கு நல்வாக்கு அருளுமாறு அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

—கீ. இராமலிங்கனார், சென்னை.

"இறைவன் திருவருளால் ஆண்டுவிழாவும்—மற்றும் தங்கள் அரும்பணிகளும் சிறக்க என வேண்டுகிறேன். சிவபிரான் திருவருள் தங்களை உடல்நலத்துடன் இருக்கச் செய்து பல்லாண்டுகள் தமிழ்த்தொண்டு புரிவிக்க!"

—க. வச்சிரவேல் முதலியார், மதுரை.

"தங்களது அயரா உழைப்பினாலும், சலியாத் தமிழ் ஆர்வத்தாலும் நம் தொன்மைமிகு தமிழ் இலக்கியமும், கலையும், ஆன்மீகமும் பேணிக் காக்கப்பட்டும், வளர்க்கப்பட்டும் வருவது உலகறியும். வள்ளலாரும், அடிகளாரும் ஆன்மிகத் துறையில் தமிழர்க்கும்

இந்தியத் துணைக் கண்டத்திற்கும் அளப்பரிய தொண்டாற்றிய இமயமும் பொதிகையுமாவர். இவ்விரு சமயப் பெரியார்களின் நல்லுரைகளை மீண்டும் மீண்டும் நினைவுகூர்தல் இருள்கவ்வியுள்ள தற்போதைய உலகில் வாழும் நமக்குப் புதிய தெம்பூட்டும் ஒளிப் பிம்பங்களைப் பெற்றது போலாகும். இதன் தொடர்பாகத் தாங்கள் மறைமலையடிகளாரின் நினைவாக வளர்த்துவரும் நூல்நிலையம் மதிக்கவொணு ஓர் இலக்கியக் கலைப்பெட்டகம் ஆகும். இதைப் பராமரிக்கத் தாங்களும் கழகமும் பல சோதனைகளுக்கிடையே நிதியைச் சேகரித்துத் தொடர்ந்து அறப்பணியாற்றி வருவது போற்றற்குரியது. இப் பெருந்தொண்டினை ஊக்குவிக்கும் வகையில் நம் தமிழக அரசு தனக்கே உரிய பாணியில் தாராளமாக மானியம் அளிக்க வேண்டும் என்று விழைகிறேன்.

விழா வெற்றிகரமாக நடந்தேற என் உள்ளார்ந்த வாழ்த்துக்கள்!''

—சை. வே. சிட்டிபாபு, சென்னை

''முன்பே திட்டப்படுத்திய நிகழ்ச்சிகளினுல் தங்கள் அழைப்பிற்கிணங்க வரக்கூடவில்லை. நூல்நிலைய விழாவுக்கு எம் நல்வாழ்த்துக்கள்.''

—குன்றக்குடியடிகள்.

''மறைமலையடிகள் நூலகம் செய்துவரும் சிறப்பான பணிகளைத் தமிழகம் நன்கு அறியும். குறிப்பாக மேற்படி கல்லூரி (திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி) மாணவர்களும், அதன் பேராசிரியர்களும் இந் நூலகம் இல்லையேல் அவர்கள் இல்லை என்ற நிலையைப் பெற்றுள்ளனர்.

—சிறுவை. மோகனசுந்தரன், சென்னை.

''விழா, சீரும்சிறப்புமாக நடந்ததுபற்றிக் கேட்டறிந்தேன், மகிழ்ச்சி. தங்கள் திருப்பணி மேலும் நடக்கட்டும்.''

—நெ. வள்ளிநாயகம், வழக்கறிஞர், சென்னை.

PROF. P. N. KAULA,
Head of the Dept of Lib Science,
Banaras Hindu University, Varanasi

It gives me great pleasure to record the appreciation of the services that Maraimalai Adigal Library has been rendering to the Tamil speaking people for the last two decades.

I had the good fortune of visiting the Library with (late) Dr. S. R. Ranganathan and Thiru R. Muthukumara swamy in early sixties.

The celebration of its two-decade service will only be a mile stone in its long career. Wishing the celebrations all success.

பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரம் செட்டியார்
தாம்பரம், சென்னை.

கடந்த 20 ஆண்டுகளாகத் தங்கள் நூல்நிலையம் ஆற்றிவரும் அரிய தமிழ்ப் பணியினைத் தமிழ்நாடும் பிற நாடுகளும் நன்கு அறியும். ஆராய்ச்சியாளர் பலருக்கும் இந் நூலகம் ஒரு கருவூல மாகும்.

திரு. சு. அ. இராமசாமிப் புலவர்
கருப்பக்கிளர், தஞ்சைமாவட்டம்

சீராரும் மறைமலைப்பேர் சேர்ந்து நாளும்
சிவணுகிற நூலகந்தான் சிறந்து நீடிப்
பாராரும் சென்னை நகர்ப் பதியோர்க் கன்றிப்
பரவுபுகழ்த் தமிழகத்தோர் பலரும் போந்து
பேராரும் நூலையெல்லாம் பெரிதுங் கற்றுப்
பெரியநல மேபெற்றுப் பெருமை யெய்தத்
தாராருந் தமிழ்க்கடவுள் தாமே யான
சரவணனுர் பேரருளைத் தருக மாதோ !

திரு. தமிழ்த்துறை,
பெரியார் நூலகம், சென்னை

திரு. வ. சு. அவர்கள் நிறுவிய மறைமலையடிகளின் பெயரில் அமைந்துள்ள நூலகம் மகத்தான பணியை ஆற்றிவருகிறது; அதுவும் தனியார் துறை நடத்தும் ஒரு நூலகம் தமிழ் ஆய்வக மாகவே விளங்குகிறது.

மற்றும் வாழ்த்துச் செய்தி அனுப்பியவர்கள் :

திரு. பொ. முத்தரசு, முதல்வர், குமரகுருபரர் கல்லூரி, திருவைகுண்டம், திரு. அ. சுப்பிரமணியன், எம்.ஏ., எம்.பில், தஞ்சை, திரு. தெ. சு. மீனுட்சிசுந்தரம், நெல்லை.

தமிழர் ஆய்ந்தோங்க வாழ்க!

புலவர். பொன் முனியப்பன், கூவலூர்.

மறைமலையார் நூலகமே நிறைவுதரும் தமிழ்க்கோட்டை
மறைந்திருந்த பழந்தமிழ்நல் லேட்டை—கண்டு
மனமுவக்கப் பாடலாம்அப் பாட்டை—என்றே
மடிந்ததென இடிந்தவுளம் துடித்தெழுந்து படிப்பதற்கு
மழையெனவே உதவும்நூல் வீட்டை—மதிப்போர்
மயக்கறுத்துப் பெறுவார் தமிழ் வேட்டை! 1

மடல்களுடன் படங்களையும் மடமகற்றும் கடன்வழுவா
மதிப்புயர்ந்த பனுவலையும் தொகுத்து—பொய்
மருள்கூட்டும் இருள்நூலை உகுத்து—மெய்
மலர்ச்சியினால் இலங்குவதை மறைமலையார் நூலகத்தில்
மணம்பரப்பும் முறையினிலே பகுத்து—யாரும்
மகிழ்வுறவே தருகின்றார் வகுத்து! 2

ஆற்றலுடைக் கழகத்தின் ஏற்றமிகு போற்றுதலால்
ஆண்டிருப தாகின்ற தின்று—நல்ல
ஆக்கத்தை விளைவித்த தென்று—இதன்
ஆட்சியாளர் நீட்சிமிகு மாட்சிக்கோர் காட்சியென
ஆர்ந்திலங்கும் நூலகம்கற் கண்டு!—தமிழர்
ஆய்ந்தோங்க வாழ்கவென்றும் நன்று. 3

மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம், நெல்லைத் திரு. தி. வை. சங்கரக்குமரன், திருச்சித் திருக்குறள் கழகத்தினர் ஆகியோர் தொலைவரிவழித் தங்கள் வாழ்த்துரைகளை வழங்கியுள்ளனர்.

———

தமிழின் தலைமையை நாட்டும் தொகுதிச் சொற்கள்

[ஞா. தேவநேயன்]

1. பூனைப்பெயர்கள்

குறிப்பு:—தமிழின் தலைமையை நாட்டும் சொற்கள், தனிச் சொற்கள் என்றும் தொகுதிச் சொற்கள் என்றும் இரு வகைய. இவை முறையே தனியடியாரும் தொகையடியாரும் போல்வன. தெரிந்துகொள்ளப்பட்ட தனிச்சொற்கள் மொத்தம் ஐம்பது; தொகைச்சொற்கள் இருபது. இதுவரை 'செல்வி'யில் வெளிவந்த தனிச்சொற்கள் பதின்ரெண்டு (பத்தொன்பது). இடையே ஒரு வேறுபாடு கருதி ஒரு தொகுதிச் சொற்கட்டுரை இன்று வெளி வருகின்றது, அடுத்த இதழில் தனிச்சொற் கட்டுரைத் தொடர் தொடரும்.

(1) பூசை

பூனை என்பது பூசை என்னும் சொல்லின் திரிபே. பூசுதல் = கழுவுதல், சிலைகழுவுதல். நெல்லை மாவட்டத்தின் ஒருபகுதியில், 'முகம் பூசுதல்' என்பது இன்றும் உலக வழக்காயிருக்கின்றது. "பூசிக்கொளினும் இரும்பின்கண் மாசொட்டும்" (நான்மணி. 94)

பூனை அடிக்கடி தன் எச்சிலை முன்னங்காலால் தொட்டு முகத்தைப் பூசிக்கொள்வதால், அது பூசையெனப் பெயர் பெற்றது. "வெவ்வாய் வெருகினைப் பூசையென்றலும்" (தொல். மர. 69). வடமொழியிலுள்ள மார்ஜால என்னும் பூனைப் பெயரும் இக் காரணம் பற்றியதே. மெழுகு—வ. ம்ருஜ் (mrj) = பூசு, கழுவு. ம்ருஜ—மார்ஜ—மார்ஜார—மார்ஜால.

பூனையைப் பூசுபூசு என்றழைப்பது பெண்டிர் வழக்கம். பூசை—பூச்சை (நாஞ்சில்நாட்டு வழக்கு). பூச்சை—ம. பூச்ச. பூசை—பூனை. ச—ஞ, போலித்திரிபு. ஒ. நோ: பிசை—பினை.

பூனைக்கண் = பூனைக்கண்போன்ற நிறமுள்ள ஒளிக்கல் (வைடூரியம்). ஆங்கிலத்திலும் இது cat's eye என்று பெயர் பெற்றிருத்தலை நோக்குக. வைடூரியம் என்னும் வடசொல்லும் இக் காரணம் பற்றியதே.

பூனை—பூஞை ஒ. நோ: அன்னை—அஞ்ஞை. இனி, பூசை—பூஞை என்றலுமாம். ஒ. நோ: குடிசை—குடிஞை. "சிலம்பி சிச்சிலி பூஞை கிருமி" (தத்துவப். 19).

ஆங்கிலச்சொல் (The Oxford English Dictionary and Klein's Comp. Ety. Dy. of the E. Language).

E. *puss*, *pus*, *pusse*. (A word common to several Teutonic languages, usually as a call-name for the cat).

Du. *poes*, **LG.** *puus*, *puuskatte*, *puus-man*, **Sw.** dial. *pus*, *katte-pus*, **Norw.** *puse*, *puus*, **Lith.** *puz*, *puiz*, **Ir. and Gael.** *pus.*

Alb *piso*, **Ruman** *pisicā*.

'Puss in the corner,' a game of children; Pussy-wants-a-corner, an American name of the game.

E. *pussy*, a pet name for a cat. Y dim suffix.

pussy-cat, a nursery word for a cat.

pussyfoot, to tread stealthily like a cat.

pussy-willow, the American glaucous willow, in reference to its silky catkins.

Puss-Etymology unknown என்பது O. E. D.; Imitative of the spitting of a cat என்பது K. C. E. D. E. L.

(2) **பிள்ளை** (பூனைப்பிள்ளை)

பிள்ளையில்லாதவர்கள், சில உயிரினங்களிற் சிலவற்றைப் பிள்ளைபோல் வீட்டில் வைத்து வளர்ப்பது பண்டை வழக்கம். அதனால், "இருக்கும் பிள்ளை மூன்று, ஓடும் பிள்ளை மூன்று, பறக்கும் பிள்ளை மூன்று." என்று ஒரு பழமொழி யெழுந்தது. ஓடும்பிள்ளை மூன்றனுள், அணிற்பிள்ளை கீரிப்பிள்ளை என்பன இரண்டு. மூன்றும் பிள்ளை பூனைப்பிள்ளையாயிருக்கலாம்.

"பிள்ளை குழவி கன்றே போத்தெனக்
கொள்ளவும் அமையும் ஓரறி வுயிர்க்கே." (தொல். மர. 24)

"நாயே பன்றி புலிமுயல் நான்கும்
ஆயுங் காலைக் குருளை யென்ப." (ஷை ஷை 8)

"நரியும் அற்றே நாடினர் கொளினே." (தொல். மர. 9)

"பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை
கொள்ளுங் காலை நாயலங் கடையே." (ஷை ஷை 11)

"கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப." (ஷை ஷை 13)

"மகவும் **பிள்ளையும்** பறழும் பார்ப்பும்
அவையும் அன்ன அப்பா லான." (ஷை ஷை 14)

"பார்ப்பும் **பிள்ளையும்** பறப்பவற் றிளமை." (ஷை ஷை 4)

என்று தொல்காப்பியங் கூறுவதால், பல்வேறு உயிரினங்களிலும் சிற்சில உயிரிகள் பிள்ளை யென்றும் இளமைப் பெயர் பெற்றிருந் தமை அறியப்படும்.

வீட்டுப் பூனைக்குட்டி பாலூட்டி வளர்க்கப்படுவது பெரும் பான்மை. ஆதலால், பூனைப்பிள்ளை யென்பது, பெருவழக்குப் பற்றி, பிள்ளையென்னும் பொதுப் பெயராலேயே குறிக்கப்பட்டிருப் பது இயல்பு. பிள்ளைபோல் வளர்க்கப்படுவது, பெரிதான பின்பும் அப் பெயர் பெறும். அணிற்பிள்ளை கீரிப்பிள்ளை முதலிய பெயர்களை நோக்குக. (குட்டி என்பது ஆட்டுக்குட்டியையும், கன்றுக்குட்டி என்பது மாட்டுக்கன்றையும், சிறப்பாகக் குறித்தலையும் நோக்குக.)

பிள்ளை யென்னுஞ்சொல் தெலுங்கிற் பில்லி யென்று திரியும். ஒ. நோ: தள்ளை (தாய்)—தல்லி. பில்லி—இந். பில்லீ (billi). பில்லி யென்பது இலத்தீனில் felis அல்லது feles என்று வழங்கும். உயர்திணையில் இருபாற்கும் பொதுவான பிள்ளை யென்னும் இளமைப்பெயர், இலத்தீனில் filius என்று மகனையும், filia என்று மகளையும் குறித்து வழங்குதல் காண்க. பிள்ளை என்பது, வடார்க் காட்டு ஆம்பூர் வட்டத்தில் ஆண்பிள்ளையையும், பாண்டிநாட்டுப் பகுதியிற் பெண்பிள்ளையையும், சிறப்பாகக் குறிப்பது, வழக்கு வேறுபாடு பற்றியதே.

பூசை அல்லது பூனை யென்பது வீட்டுப் பூனையையே. காட்டுப் பூனை வெருகு எனப்படும். வெருவத்தக்க தோற்றமும் வலிமையும் உடையது வெருகு. வெருவுதல்—அஞ்சுதல். வெருகு வீட்டில் வளர்க்கப்பட்ட பின் பூசையெனப் பெயர் பெற்றது. "வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலும்" என்று தொல்காப் பியம் கூறுதல் காண்க. வீட்டுப்பூனை இலத்தீனில் Telis domestiea எனப்படும்.

Feline (adj.)=catlike. Felid=one of the Felidoe or cat-tribe.

(3) விடரகன்

விடுதல் = பிளத்தல், விடு—விடர் = பிளவு, பிளப்பு, விடரவன் =(பகலிற் கண்பிளவுள்ள) பூனை (யாழ். அக.). விடரவன்—விட ரகன்—விடரகம்—விடருகம் = பூனை (நாமதீப. 203)—விடருகம்.

விடரகம்—விடாரகம்—வ, விடாரக = பூனை.

விடாரகம்—விடாலகம் = பூனை (சூடா.)

விடாலகம்—வ. விடாலக = பூனை.

விடாலகம்—விடாலம் = பூனை (சங். அக.)

விடாலம்—வ. விடால—வைடால = பூனை.

விடாரகம்—விடாரம்—வ. விடார—வைடூர்ய = பூனைக்கண் போன்ற ஒளிக்கல்.

வைடூர்ய—த. வைடூரியம்,

தமிழிற் பூனைக்கண் என்றும் ஆங்கிலத்தில் cat's eye என்றும் உறுப்பைத் தெளிவாகக் குறிப்பிட்ட உவமையாகுபெயர் தோன்றி யுள்ளது. சமற்கிருதச் சொல்லோ பூனைப்பெயரினின்றே திரிந்த திரிசொல்லாக வுள்ளது. வ. விடாரக—பிடாரக (b), வ. விடால—பிடால (b). வகரமுதல் வடமொழியிற் பகரமுதலாகத் திரிதல் இயல்பே. ஒ. நோ : வலம்—வ. பல (bala).

(4) க. கொத்தி = பூனை.

ம. கொற்றி, குறிஞ்ஞி, (குறுஞ்ஞி). = பெண்பூனை.

தமிழில் இச் சொல் இறந்துபட்டது. பழஞ்சேர நாட்டுத் தமிழின் (வடசொற் செறிந்த) திரிபே மலையாளமாதலால், கொற்றி யென்பதைத் தமிழாகக் கொள்ளலாம்.

குறு, குறுகுறு, கொறுகொறு (ம. குறுட்டுக—குருட்டுக, குறும்முக; க. கொர், கொர, கொரகொர) முதலிய ஒலிக்குறிப்புக் களை யொத்த பூனையடித்தொண்டை யொலிக் (purr) குறிப்பி னின்று குறுஞ்ஞி (—குறிஞ்ஞி) என்னும் பூனைப்பெயர் தோன்றி யிருக்கலாம். இதற்கு கொற்றி யென்னுஞ் சொல்லொடு தொடர் பில்லை.

தமிழிற் குருடனைக் குறிக்கக் கொத்தை என்றொரு சொல் உளது. "கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித்து" (தேவா.

1040 : 2), "இன்னன் என்பது, 'கண்ணற் கொத்தை, காலான் முடவன்' என்பன. (தொல், வேற். 11, இளம். உரை'. கொத்தி யென்னுங் கன்னடச்சொல் கொத்தையென்னும் தமிழ்ச்சொல்லைப் பெரிதும் ஒத்துளது. பூனை பகலில் முழுக்கண்ணும் தெரியாமல் அரைக் குருடாயிருப்பதனல், அதற்குக் கொத்தையென்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம். அப் பெயர் ஒரு திரவிட மொழியிற் கொத்தி யென்று திரிந்திருப்பது, உத்திக்கும் இயற்கைக்கும் பொருத்த மானதே. கொற்றியென்பது கொத்தியென்பதன் திரிபாயிருக் கலாம்.

பூனைக்கு மேலை மொழிகளெல்லாவற்றிலும் பெருவழக்காய் வழங்கும் பெயர், பல்வேறு வகைகளில் திரிந்திருப்பினும் கொத்தி என்னும் சொல்லையே ஒத்துள்ளது.

Gk. *katta, kattos*; **mod. Gk.** *gata*; **L.** *catta, catus, cātus, cattus*, **Late Latin.** *cattus, catta.*

It. *gatto*; **Sp., Pg.** *gato*; **Cat.** *gak*; **Pr.** *cat*; **ONF.** *cat*; **F.** *chat* (fem. *gatta, gata, cata, cate, chate, chatte*);

E. *cak*; **OE., ME.** *cat, catt, catte.*, **ON.** *kott-r, kattus*; *keta*, fem; **Sw.** *katt, katta*; **Da.** *kat*; **MLG.** *katte*; **MDu.** *katte, kat*; **D.** *kat*; **OHG.** *kazza, chazza, chataro*; **MHG., Mod. G.** *katza*; **MHG.** *katero, kater*; **mod. G.** and **Du.** *kater*=he cat.

Oir. *cat* (masc.); **Gael.** *cat* com. **W.** *kath*; **Welsh** and **Cornish.** *cath*; **Breton** *kaz*; **Vannes** *kac'h* m. **OCo.** *kat.*

Nubian *kadis*; **Arab** *qitt*, tomcat, *qitta*, cat.

Slavonic *kot*; **OSlav.** *kot'ka*; **Bulg.** *kotka*; **Slovenish** *kot* m; **Russ.** *kot* m. *kotchka, koshka*; **Pol.** *kot* (*koczur* m.); **Boh.** *kot* m. *kotta* f.; **Sorabian** *kotka*; **Lith.** *kate*; **Finnish** *katti.*

Derivatives.

Chatoyant, of a changeable colour, shining like the eyes of a cat.

caterpillar fr. **LL.** catta pilose=hairy cat.

caterwaul fr. **LG.** caterwanlen=to cry like cats.

meerkat fr. **MDu.** meer catte=sea cat.

catteny = place where cats are bred.

kitten, catkin, cattish, catishly, catishness, catling, catty, cattily, catliness etc.

ஐரோப்பாவில் கி. பி. 3ஆம் நூற்றுண்டு வரை பூனையிருந்த தில்லையென்றும், அது எகிபது நாட்டிலிருந்து அங்குக் கொண்டு வரப்பட்டதென்றும், cat என்னும் அதன் பெயர் எகிபதியச் சொல் லென்றும், **மாக்கசு முல்லர்** கூறுகின்றுர். பூனை நீண்ட காலமாக எகிபது நாட்டில் வளர்க்கப்பட்டு வந்ததனுலும், ஓர் எகிபதியப் பெண் தெய்வம் பூனைத்தலை கொண்டிருந்ததனுலும், ஐரோப்பா விற்கு எகிபது அண்மையிலிருப்பதனுலும், அவர் கூற்றுப் பொருத்தமாகவே தோன்றுகின்றது. ஆயின், குமரி நாடே மாந் தன் பிறந்தகமாதலாலும், தமிழகத்திற்கு எகிபதிேேடு நீண்ட காலமாக நீர் வாணிகமும் நிலவாணிகமும் இருந்து வந்ததனுலும், வெருகு தமிழகக் குறிஞ்சிநிலக் கருப்பொருளாதலாலும், பூனை தமிழகத்தினின்றே எகிபதுவிற்குச் சென்றிருத்தல் வேண்டும். அதனுல் அதன் பெயரும் தமிழ்ச் சொல்லாயேயிருத்தல் வேண்டும்.

மாக்கசு முல்லர் பூனைப் பெயரையும் பூனைக் கண்ணையும் பற்றிக் கூறியிருப்பதின் (On the Name of the Cat and the cat's eye) சில பகுதிகள் வருமாறு:—

"Our domestic cat came to us from Egypt, where it had been tamed by a long process of kindness, or, it may be, of worship. In no classical writer, Greek or Roman, do we find the cat as a domestic animal before the third century A. D. It is first mentioned by Caesarius, the physician, brother of Gregory, the theologian of Nazianzus, who died 369 A. D. He speaks of 'kattai endrumoi,' About the same time Palladius........ writes "contra......ponunt"......it is clear that when Palladius wrote (fourth century A. D.) tame mustelae were still more common than cats, whether called *cati* or *catti*.

"Evagrius scholasticus (Hist. Eccl. 17, 23), about 600 A. D., speaks of *katta* as the common name of 'ailouros,' here meant therefore, for cat......

"And Isidorus, his contemporary, expresses himself in the same sense when saying (12, 2, 38), 'hune......... *catum*......vocant.

"If we admit, in the absence of evidence to the contrary effect, that the tame cat came from Egypt to Greece and Italy in the fourth century A. D., and that the shrewd little animal was called by the Romans *catus*, everything else becomes intelligible.

"In the ruins of Pompeii, where the bones of horses, dogs and goats have been found, no bones of cats have hitherto been dis covered.......

"In the language of Romania no traces exist of the word *catus*, probably because at the time when that Romanic dialect became settled in Dacia, *catus* did not yet exist as a Latin name for cat.

The Romans did not transfer the name of Mustela to the cat, but by a kind of popular etymology, changed *cattus* into *catus*, and these two names, *katta* and *catus*, found their way afterwards into nearly all the languages of Europe."

"We now come to the question, whether cat was known at an carly time in India. The two principal words in Sanskrit for cat are 'mārjara' and 'vidāla.'

"Mārjāra means the cleaner, the cat being well known for its cleanliness......"

"The second name for cat in Sanskrit is *vidāla* or *bidāla*......"

"It is difficult to analyse this word. I thought at first that it might be connected with vidāla (bidāla, in the Ait, Ār. III. 1, 2, 6) which means cut in half, split in the middle, which would be a very appropriate term for a cal's eye. But this would leave the lingual of

unaccounted for. In the Uṇādi-Sutras (I. 117) it is derived from *vid*, to shout with the suffix āla. This suffix shows a certain analogy with āliga in mārjāliya, another name for cat......"

"Vaiḍūrya and Vaidūrya, the very form that would best correspond to the Greek *ailouros* means in Sanskrit the cat's eye. The cat is called maṇi vaidurya lokana, i. e. having eyes like the Vaiḍūrya jewel. It is true that so ancient a grammarian as Pāṇini (IV. 3, 84) derives vaiḍūrya from vidūra, 'very distant,' and that accordingly it is often spelt with a dental d. But this seems an after-thought. The transition of vaiḍārya into vaiḍūrya is not impossible, even in Sanskrit, if we remember such parallel forms as dūra and davīyas, sthūla, sthavīyas, &c......"

"It was objected by Kātyayana that Paṇini's rule (Pān. IV. 3, 84), according to which vaiḍūrya is formed from Vidūra, must be wrong, because the Vaiḍūrya jewel does not come from Vidūra, but from Bālavāya, and is only cut or polished at Vidūra......"

—What Can India Teach Us?—pp. 261—268.

இதினின்று வைடூர்ய என்பது 'விதூர (மிகத் தொலைவான) என்னும் சொல்லினின்று வடமொழியில் பாணினியால் திரிக்கப் பட்டுள்ளது தவறு என்பது, தெளிவாகும். வடமொழிச் சென்ற தென்சொற்களையெல்லாம், பொருந்தப் பொய்த்தலாக வேறு மூலங் காட்டி மறைப்பது, வடமொழியாளர் வழக்கமே.

விடாரக என்பது பிடாரக (b) என்றும் விடால என்பது பிடால (b) என்றும், பகர முதற் சொல்லாகத் திரிக்கப்பட்டிருப்பதே வடசொல்லின் பின்மையைக் காட்டும்.

பிடால (biḍāla) என்னும் சொல்லின்கீழ், "also written viḍāla, of doubtful origin" என்று மானியர் வில்லியம்சு தம் சமற்கிருத ஆங்கில அகர முதலியிற் குறித்திருப்பது கவனிக்கத் தக்கது.

———

அப்பரடிகளும் சமண சமயமும்

[டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

(முன் இதழ் எசஆம் பக்கத் தொடர்ச்சி)

தமக்கையாரோ 'மனைத்தவம்' புரிவாராய் அமைதி நாடி வாழ்ந்தனர். இந் நிலையில் காவல் இலாத நிலை இவ் விளைஞராகிய மருளை நீக்கியார்க்கு வந்துற்றது. வாழ்வில் ஏமாற்றம் அடையும் இளையவர் சிலர், அல்லது பெற்றோர்மாட்டுப் பூசலிட்டுப் புறப் படும் இளையவர் பலர் படையிற் சேர்ந்திட விரையும் இக் கால நிலையை ஒத்து வைத்துணர்ந்தால், அன்றைய மருள்நீக்கியார் நிலையை இனிது உணரலாம்.

> "காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
> கரைநின்றவர் 'கண்டு கொள்', என்று சொல்லி
> நீத்தாய கயம்புக நூக்கியிட
> நிலைக் கொள்ளும் வழிதுறை ஒன்றறியேன்"

என்று முதற்றிருப்பதிக வரிகள்[15] இந்த நோக்கில் பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ள அருமைப்பாடு உணரத் தக்கது. ஒரு நீர்நிலையின் மருங்கு காவலர் இல்லாத போழ்து, அதன் ஆழம் அறிய ஒருவர் முற்பட்டனர்; கரை நின்றவர் சிலரோ, 'நீரே இறங்கிப் பார்த்துக் கண்டுகொள்க' என்று கூறி, உடன் அந்நீர் நிலையிற் புகும்படி நூக்கினர். இதனை அடிகளார் வாழ்விேனாடு ஒத்துக் காணலாம். பெற்றோர்களாகிய காவலர்கள் காவல் இல்லாதபோது, புறச்சமயம் பற்றி உணர முற்பட்ட காலை, சிலரது நெறிப்பாட்டின் பின் புறச் சமயம் புகுந்த தம் நிலையைத் தான் இந்த வரிகளில் மருள் நீக்கியாராக விளங்கிய அடிகளார் சுட்டினர் என்று கருத இடம் உள்ளது.

அடிப்படைக் காரணங்கள் :

ஆயின் அடிகளார் சமண சமயம் புகுந்தது இந்த மன நிலையில்தான் என்பது ஒருதலை. அவர்க்குத் துன்பத்தினின்றும் விடுதலை பெறவேண்டும் என்ற வேட்கை முறுகி எழுந்தது. சமயங்கள் 'ஆனவற்றின் நல்லாறு தெரிந்துணர, நம்பர் அருளாமையினால்' என்ற சொற்களால் சேக்கிழார் குறிப்பிடுவது காணலாம்[16] சமய

15. Ibid. 4—1—5.
16. திருத்தொண்டர் புராணம்—1307.

நூலறிவில் ஆராய்ந்து ஆழ்ந்து அமைதி பெற எண்ணி அவர் சென்றார். 'கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம் குறுகு வார்', என்பர் சேக்கிழார்.[17] 'கொல்லாமை' முதலிய ஒழுக்கங்களை உடையார்போற் புறத்தே காட்டி அகத்தே தீமை வடிவினர் என்று சமணர்களைச் சேக்கிழார் இவ்விடத்துப் பழித்தனர்.

இவ்வாறு சூழ்நிலையும், அதனால் விளைந்த மன உளைச்சலுமே அடிகளாரைச் சமண சமயத்திற்கு ஈர்த்தன என்று கொள்ளுவது பொருத்தமானதாகத் தோன்றுகின்றது.

சமண சமய வாழ்வு :

இனி, அப்பரடிகள் தருமசேனராகிச் சமண சமயத்தில் கல்வி மேம்பட்டுப் பிற சமயத்தவரை யெல்லாம் வென்று சிறப்பதற்கு வேண்டிய வீறுகள் எல்லாம் அவர்க்கு இயல்பாக வாய்த்தன. பெரும் புலவராகவும் சமய வாதியாகவும், வாழ்ந்த நல்வாய்ப்பு அங்கு அடிகளார்க்கு உண்டாயினமை சேக்கிழாரும் சுட்டுவர். இவ்வாறு சமண நெறிப்பட்டபோது தருமசேனராகிய மருள் நீக்கியார் பெரும்புலவர் ஆதலின் அச் சமய நெறிக் கொள்கை களைப் பாடிப் பல நூல்கள் இயற்றியிருக்கவும் கூடும்; சைனர் கடவுள் மேல் பல தோத்திரப் பாடல்களைப் பாடி வழிபட்டிருக்கவும் கூடும். ஆனால், சேக்கிழார் அவற்றைப் பற்றிக் குறிப்பிடவில்லை. குறிப்பிடாவிட்டாலும், இயல்பாக எண்ணுங்கால் இவ்வாறு கொள்ளுவதும் தவறாகாது.

பெரும்புலமையும், ஆயிரக்கணக்கான பாடல்களை உணர்ச்சி உந்துதலால் பாடிக்கொண்டேயிருக்கும் கவித்திறமும் வல்ல இவ் வருட்புலவர் சமண சமய நெறிநின்ற காலத்து ஏதும் பாடாமல் இருந்திருத்தல் இயலாது. ''பதிகம் ஏழெழுநூறு பகருமா கவியோகி''[18] என்று நம்பியாண்டார் நம்பிகள் பின்னாளிற் பாராட்டுமளவிற்குச் சிவநெறிப் பாட்டுக்களை, நாற்பத்தொன்பதினாயிரம் பதிகப் பாட்டுக் களை இயற்றும் பெருங்கவிஞர், தாம் முழு மனத்துடன் ஈடுபட்ட சமய வாழ்வில் வாளாவிருந்தனர் என்று கொள்வது பொருத்த மற்றது. எண்ணற்ற கவிதைகளை அங்கும் அவர் பாடியிருக்கலாம். அவை கால வெள்ளத்தில், கறையான் தாக்குதலில் மறைந்தன என்று கொள்ள இடம் இருக்கின்றது.

---

17. Ibid. *1307*.

18. *திருவேகாதசமாலை—பா—(பதினோராம் திருமுறை.)*

சமண சமயத்தே பாடியது உண்டா?

சமணர்கள் திருநாவுக்கரசர் பாடியதாக ஏதும் நூல்களைக் கொள்கின்றனரா என்று சிந்தித்த இக் கட்டுரையாசிரியன், சமணத் தலங்கள் பலவற்றேடும் தொடர்பு கொண்டும் விவரங்கள் கிடைக்க வில்லை. தொண்டை நாட்டிலுள்ள சமணத் தலங்கள் பலவற்றின் மேலும் அவ்வப்போது எழுந்த பாடல்கள் பலவற்றை ஏடுகளி னின்றும் அரிதின் ஆராய்ந்து தொகுத்து கி. பி. 1912இல் ஒரு நூல்வெளியிடப் பெற்றுள்ளமையை வல்லார்வாய்க்கேட்டுணர்ந்து அந்தத் திரட்டு நூலில் ஏதேனும் கிடைக்கலாம் என்று எண்ணிய போது, சென்னை சைன கிரந்த நிலையத்தினர் 1956இல் வெளி யிட்ட அந் நூலின் இரண்டாம் பதிப்பு, சென்னை சமண சமயப் பேரறிஞர் சீவபந்து திரு. சீபால் அவர்களால் கிடைக்கப்பெற்றது. 'பல சின தாசர்களால் பாடப் பெற்ற திருநறுங்குன்றம் அப்பாண்டை நாதர் தோத்திரத்திரட்டு' என்ற தலைப்புடன் கூடிய அச் சிறுநூலில் (பக்கங்கள்75) 'திருநறுங் கொண்டை அப்பாண்டை நாதர் பேரில் 'அப்பர் பாடிய பதிகம்' என்ற தலைப்பில் உள்ள பதிகம் காணப் பட்டது.[19]

சமண சமயத்தில் அப்பர் பெயரால் வழங்கப்பட்டு வரும் இப் பதிகம், உறுதியாக **தருமசேனர்** என்ற அப்பரடிகளால் பாடப் பட்டி ருக்குமாயின், அவரது சமண சமய வாழ்வு பற்றிய இருண்ட பகுதியை ஓரளவு உற்று நோக்கிடக் கைவிளக்காக இச் சிறு பதி கத்தைக் கொள்ளலாம். இப் பதிகத்தைப் பற்றிய விளக்கங்களைச் சுருக்கமாகக் கண்டு, இதன் அடிப்படைக் கருத்தினை ஆராயலாம்.

'தருமசேனர்' பாடிய சமணப் பதிகம் :

இப் பதிகத்திலுள்ள பதினொரு பாட்டுக்களும் அப்பரடிகளுக்கே இயல்பாக உள்ள பணிவுடைமையும் விளங்குவனவாக உள்ளன. தம்முடைய சிறுமையை முதல் இரண்டு வரிகளில் பெரும்பாலும் உரைத்துள்ளார். திருநறுங்கொண்டை அப்பாண்டை நாதர் திருப் பெயரை விளித்து, 'நான் உன்னையே நம்பினேன்; நின் திருவடிப் பேற்றை எனக்கு நல்கியருள வேண்டும்' என்ற செய்தி ஒவ்வொரு பாடலிலும் உரைக்கப்பட்டுள்ளது; இது தவருமல் நான்காம் வரியில் இடம்பெற்றுள்ளது.

பதிக முடிவில் தாம் பாடிய பத்துப் பாட்டுக்களையும் மணமிக்க தொடையலாக ஏற்றுக்கொண்டருளவேண்டும். என்ற விண்ணப்

19. பலஜினதாசர்களால் பாடப்பெற்ற திருநறுங்குன்றம் அப் பாண்டை நாதர் "தோத்திரத் திரட்டு,"—ஜைன கிரந்த நிலையம் சென்னை 1956—PP7—9.

பம் பதினொராவது பாட்டாக மலர்ந்துள்ளது. இப் பாட்டுக்களின் தொடக்கப் பாட்டு பின்வருமாறு :

''வந்து வந்து பிறந்துழலா மனையுமில்லை
மற்றுமினி முலையருந்தா மாந்தரில்லை
சந்ததமும் இப்படியே நாயே னிந்தச்
சாகரத்தி லேமூழ்கித் தயங்க லாமோ
எந்தையே முக்குடைக்கீ ழாதிநாதா
இனியமையும் பிறப்பொழித்தீ டேற்றவேண்டும்
நந்துலவும் நறுங்கொண்டை யருகா வுன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்குவாயே.''

முக்குடைக்கீழ் அருக பரமேட்டியை; 'எந்தையே' என்றும், 'ஆதி நாதா' என்றும் 'அருகா' என்றும், பல திருப் பெயர்களைக் கூறிப் போற்றும் 'தருமசேனர்' சமண சமயத்தவராக இருந்தபோது வழங்கப்பெற்ற பெயராலேயே சுட்டலாம் அன்றோ? 'உன்னையே நம்பினேன்; நின் திருவடிப் பேற்றை நல்குக' என்று மனமுருகி வேண்டுகின்றார்.

இதனுள் அமைந்த

''நறுங்கொண்டை யருகா வுன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்குவாயே''

என்ற தொடர்கள், பாடல்தோறும் வந்து பதிகத்தின் தொடர்நிலை அமைப்பாய்த் துலங்கக் காண்கின்றோம்.

'பல பிறவிகள் எடுத்து வருந்தியது போதும்; எப்போதும் நான் இப்படியே பிறவிக்கடலில் மூழ்கி வருந்துதல் தகுமோ' என்று கனிவு தோன்ற வினவுகின்றார் அடிகளார். 'பிறவாமை வேண்டும்' என்று வேண்டிக்கொள்வாராய்,

''இனி யமையும் பிறப்பொழித்து
ஈடேற்ற வேண்டும்''

என்று இசைக்கின்றார். பல பிறவிகள் எடுத்து வருந்தியதை அழகுறக் கவி இசைப்பாராக அடிகளார், ''என் பிறவிதோறும் என் விதியினை எழுதி எழுதிப் படைப்புக் கடவுள் சலித்தான்; பல தாயார்கள் வயிறு சுமந்து வயிறு சுமந்து சலித்து இளைத்தார்கள்; நான் பிறந்து பிறந்து அலுத்தேன்' என்று ஏழாவது பாட்டில் உரைக்கின்றார்.

''அயன்சலித்தான் எழுத முடி யாதான் ஆகி
அன்னையரும் வயிறிளைத்தார் அடியேன் சாலப்
பயமுறத்தான் பிறந்து பிறந் தலுத்தேன்''

என்ற அவ்வரிகள்.

''மாதா வுடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்;
வேதாவும் கை சலித்து விட்டானே''

என்று பட்டினத்தார் ஞானப்பாட்டு வரிகளைப் பெரிதும் ஒத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 'பொல்லாப் பாவி' (2) 'கற்றறியேன்' (2) பேயன்' (3) 'பொல்லா மூடன்' (8) 'கண்மகன்' (8) 'வெகு துட்டன்' (8) 'அறிவில்லாக் கோழை' (8) 'கபடன்' (8) அறியேன் (11) என்ற தொடர்களும் சொற்களும் தம்மைச் சிறுமைப் படுத்திப் (self condemnation) பேசும் பெருந்தகவை விளக்கி நிற்கின்றன. வேறு யாரும் கூருத அளவுக்குத் தம்மைப் பழித்துரைக்கும் இயல்பு, சமண சமயத்துச் சார்ந்திருந்த காலத்தும் அடிகளார்க்கு இயல்பாக இருந்தது போலும்.

''தாழ்வெனும் தன்மையோடு, சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது''

என்ற சாத்திரவாக்கு இவ்விடத்துக் கருதத்தக்கது.

சமண சமயம் சார்தற்கு முன்பு முறையான மனை வாழ்வு ஒன்று தருமசேனர்க்கு இருந்திருக்கக்கூடும் என்று கருதுதற்கு இப் பதிகத்தின் மூன்ருவது பாடல் துணை செய்கின்றது.

''அன்னை யுதரந்தனிலே பத்துமாதம்
அவதரித்துக் குழவியதா யானதாப்
பின்னை மனை பணங்காசு வீடு மாடும்
பெண்டிர் மக்களும் வருத்தப் பேயனுகி''

'மக்களே மணந்ததாரம் மற்றவயிற்றவரை, ஓம்பும் சிக்குளே அழுந்தி யீசன் திறம்படேன்' என்று பின்னல் பாடும் பாடற்பகுதி முன்னும் நினைவு கூரப்பட்டது. அக் கருத்தோடு இச் சமணப் பாட்டுப் பகுதி ஒத்திருத்தலை உன்ன வேண்டியுள்ளது.

''என்னை யெமன் வந்து பிடித் திழுக்குங்காலை
என் செய்வேன்''

என்ற மூன்ரும் பாட்டுத்தொடர் மரணத்தால் வரும் அச்சம் பற்றி யெழுந்தது. 'கால பாசக் குறுந்தொகை' என்ற பதிக முழுவதும்

பின்னர், அடிகளாராற் பாடப்பட்டுள்ளது. இறப்புப் பற்றிய அச்சவுணர்வு சிவநெறிப் பாட்டுக்களில் காணப்படுவது போன்றே இங்கும் காணப்பெறுவது குறிப்பிடத்தக்கதாய் உள்ளது.

பெண்களை வருத்தம் அடைவிக்கும் கருவிகளாக எண்ணி, மிக இழித்துப் பாடுவதாக ஆருவது பாட்டு அமைகின்றது.

''மானனைய விழிகாட்டி முகத்தைக் காட்டி
வண்கலச முலைகாட்டி மாலைபூட்டும்
தேனனைய மொழிமடவாரல்குற் பாம்பு
தீண்டிவிட மேறிமிகத் தயங்கலாமோ''

இவ்வளவு விரிவாகப் பெண்ணினத்தை இழித்துரைக்கும் பகுதி, கடுந்துறவுக் கோட்பாட்டை உடையவர் சமணர்கள் என்ற குறிப்பைச் சுட்டுவதாக உள்ளது.

''கட்டளைசேர் சமய மோராறுந் தானுய்க்
கலந்தரிய சமயமதில் மேலதாகும்
இட்டமுட னேயிருந்தேயறமே கூர்ந்து
எட்டாத தத்துவனே ஏகநாதா''

எனவரும் ஒன்பதாவது பாடற்பகுதி, சமண சமயத்தே சார்ந்திருந்த காலத்தும் எல்லாச் சமயங்களும் இறைவனே என்ற உணர்வு அடிப்படையில் ஊறி நின்ற பெருநிலை உடையவர் அடிகள் என்ற உண்மையை எடுத்துரைப்பதாக உள்ளது.

''விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கேற்ற தாகும்''

என்ற தேவாரத்திற் பாடும் மனஉறுதியும், விரிந்த போக்கும் அடிகளார்க்கு எப்போதும் இருந்தன என அறிவதற்கு இவ்விடம் தக்க சான்றாக அமைகின்றது.

(தொடரும்)

துணிவு வேண்டும்

காலத்திற்கேற்ற கருத்து எது தேவை என்பதைப் புலவர்கள் அறிவிக்கவேண்டும். அதற்குத் தேவை துணிவு! அந்தத் துணிவு தெளிவின் அடிப்படையில் பிறக்கவேண்டும். அந்தத் தெளிவுடைய கருத்தும் கனிவோடு எடுத்துச் சொல்லல் வேண்டும்.

பேறிஞர் அண்ணா

உயர்நீதிமன்றத் தலைமை நடுவர்
மாண்பமை எம். எம். இசுமாயில்

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி மாண்பமை இராம பிரசாத்ராவ் அவர்கள் ஓய்வு பெற்றதை அடுத்து, 6—11—79இல்



உயர்நீதிமன்ற மூத்த நடுவர் மாண்பமை எம். எம். இசுமாயில் அவர்கள் தலைமை நீதிபதியாகப் பதவி ஏற்றார்கள்.

இப்பதவி ஏற்பு விழா "இராசபவனத்தில்" நடைபெற்றது. தமிழக முதல்வர் மாண்புமிகு ம. கோ. இராமச்சந்திரன், மற்றுமுள்ள தமிழக அமைச்சர்கள், நடுவணரசின் அமைச்சர் பாலா பழனூர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், வழக்கறிஞர் சங்க உறுப்பினர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள், நகரின் முதன்மையான பெருமக்கள், எதிர்க் கட்சித் தலைவர் மு. கருணாநிதி ஆகியோர் இவ் விழாவில் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் பணி அழைப் பாணையைப் படிக்க மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி நீதிபதி இசுமாயில் அவர்கட்குப் பதவி உறுதி மொழியை வழங்கி வாழ்த்துக் கூறினார்.

மாண்பமை நீதிபதி இசுமாயில் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் இசுலாமியர்களின் புண்ணிய பயணத்தலம் எனக் கருதப்படும் நாகூரில் பிறந்தவர். நாகை தேசிய உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயின்றதுடன் சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றுப் பின்னர்ச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து பயின்று சட்டத் துறையில் தேர்வு பெற்று அந்நாள் தலைமை வழக்கறிஞர் ராஜா ஐயரிடம் பயிற்சி பெற்றார்.

பின்னர் நீதித்துறையில் படிப்படியாக உயர்ந்து பல பதவிகளை ஏற்றுத் தில்லி உயர்நீதிமன்ற வழக்கறிஞராக 1967இல் பதவி

ஏற்ருர். அதே ஆண்டு நவம்பர்த் திங்களில் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியானுர். இவருக்கு இப்போது அகவை 58 ஆகிறது. இவர் 1983ஆம் ஆண்டு பிப்ரவரி வரை இத் தலைமை நீதிபதிப் பதவியிலிருப்பார்.

திரு இசுமாயில் அவர்கள் பள்ளிப் பருவத்தில் காந்தியடிகளின் வழி நின்று நாட்டு விடுதலைப் போரில் ஈடுபாடு கொண்டார். இவர் கல்வியில் ஆர்வமுள்ளவர். பல சமுதாயப் பணிகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவை அனைத்துக்கும் மேலாக இவர் தமிழ் மொழியிடம் கொண்டிருக்கும் பற்று வியந்து பாராட்டத்தக்கது. இதழ்கள் பலவற்றில் அவ்வப்போது இவருடைய தமிழ்க் கட்டுரைகள் இடம் பெறும். இப்போது இவர் கம்பன் கழகத்தின் தலைவராக விளங்குகிருர். இவர் எழுதிய ‘கம்பன்கண்ட இராமன்’ என்னும் நூல் 1975இல் வெளிவந்தது.

நீதிபதியவர்கட்கு நமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

———


தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குப் பொன்விழா

தமிழ் வளர்ச்சிக்கு என அண்ணுமலை அரசரால் நிறுவப் பெற்ற பல்கலைக் கழகம் கோலாகலமாக டிசம்பர் 6,7,8 தேதிகளில் பொன்விழாக் கொண்டாடுகிறது. முதல் முதல் தமிழ் எம். ஏ., வகுப்பு தொடங்கப் பெற்ற இடம். தமிழ்க் கடல் கா. சு. பிள்ளை, பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், விபுலானந்த அடிகள், ந. மு. வேங்கடசாமி நாட்டார், டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை போன்ற தமிழ்ப் பெரும் புலவர்களைப் பேராசிரியராகப் பெற்றுச் சிறக்கும் இடம். மொழி ஆய்வில் இந்தியாவில் தனிச் சிறப்புடன் விளங்குகிறது. 7000 மாணவர்கள் பயில்கிருர்கள். அஞ்சல் வழிக் கல்வி மூலம் 7000 மாணவர்கள் பயில்கிருர்கள். 20 துறைகளில் மேல் நிலைக் கல்வி (Post Graduate கல்வி) கற்பிக்கப் பெறுகிறது. இராசா முத்தையவேள் அவர்கள் முன்னின்று விழா சிறக்க நடத்துகிருர். இதுவரை 50,000க்கு மேற்பட்ட பட்டதாரிகள் பட்டம் பெற்றுள்ளனர். புத்தகக் காட்சி, அறிவியல் காட்சிகள் ஏற்பாடாகி உள்ளன. குடியரசுத் தலைவர் விழாவைத் தொடங்குகிருர். தமிழக முதல்வர் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுகிருர்.

———

வித்துவான் கோ. வே. பெருமாள், எம்.ஏ., பி.டி., மறைவு

இவர் நெல்லை ம. தி. தா. இந்துக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்தார். நீண்டகாலமாகக் கழக ஆட்சியாளரிடம் அன்புடன் நெருங்கிப் பழகியவர். 'பொருநை வளம்,' 'வானொலியில் வள்ளுவர் ஓவியங்கள்' என்னும் இரு நூல்களை எழுதிக் கழக நூலாசிரியராக விளங்கியவர். கழக ஆட்சியாளர் அவர்கள் நெல்லைக்கு வரும்போதெல்லாம், அவர்தம் வருகையை முன்னதாக அறிந்து, ஆட்சியாளர் போய்ச் சேர்ந்த அன்றே கையுறையாகப் பழங்கள் கொண்டுவந்து கொடுத்து அன்புரையாடல் செய்வார்.



இப்படிப்பட்ட பண்பாளர் 3—11—79இல் தமது சொந்த ஊராகிய கோபால சமுத்திரத்தில், திடும் என மார்படைப்பால் காலமானர் என்ற செய்தி கேட்டுத் தாங்கொணத்துயர் அடைகிருேம்.

இவருக்கு 3 பெண்மக்களும், 3 ஆண் மக்களும் உளர். மூத்த மகன் குடந்தை அரசினர் கல்லூரியில் பணிபுரிந்து வருகிருர். 2வது மகன் M. Sc பட்டம் பெற்றும் 3வது மகன் பி. ஏ பட்டம் பெற்றும் வேலை பெறும் நிலையில் உள்ளனர்.

மூத்த மகன் ஆழ்வார்குறிச்சிக் கல்லூரியில் எம். எசி. (இயற்பியல்) முதலாண்டு படித்து வருகிருர். திரு. பெருமாள் அவர்கள் ஆட்சியாளர் கருத்தின்படி டாக்டர் பட்டம் பெறுவதற்காகப் 'பொருநைக்கரை நாகரிகம்' என்னும் பொருள்பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிவந்தார். அஃது அரைகுறையாக இருப்பது குறித்து மிக மிக வருந்துகிருேம்.

தமிழ்நாடு சிறந்த எழுத்தாளரும், பேச்சாளருமான ஒருவரை இழந்துவிட்டது குறித்துப் பெரிதும் வருந்துகிருேம்.


மறைந்த பேராசிரியரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, மறைந்த இவர்தம் குடும்பம் பல துறைகளிலும் வளம்பெற்று வாழத் திருவருள் புரியும்படி எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்ருேம்.

———

தென்னெற்றி விசுவநாதம் மறைவு

தென்னெற்றி விசுவநாதம் அவர்கள் 10—11—79இல் தமது 85ஆவது அகவையில் விசாகபட்டணத்தில் காலமானுர் என்ற செய்தி அறிந்து வருந்துகிருேம்.

1895இல் ஆந்திர நாட்டில் பிறந்த திரு. தென்னெற்றி விசுவநாதம் அவர்கள் சென்னை மாநிலக் கல்லூரியில் படித்துப் பி. ஏ. பட்டம் பெற்றுப் பின்னர் சட்டக் கல்லூரியில் பயின்று வழக்கறிஞரானுர். சென்னைச் சட்டமன்றத்தில் அமைச்சியல் செயலாளராக இருந்தார். பின்னர் 1956இல் கம்பெனி சட்டக் குழுத் தலைவராகப் பொறுப்பேற்ருர்.



அவ்வமயம் கழகப் பங்காளிகள் தீர்மானித்த, கழக ஆட்சியாளரின் ஊதியத்தை ஷி சட்டக்குழு அலுவலகம் முதற்கண் ஏற்றுக்கொள்ளவில்லை. உண்மை நிலையினை நேரிலே எடுத்துரைத்தால் நலம் கிடைக்குமெனக் கருதி ஆட்சியாளர் அவர்கள் தில்லிக்குச் சென்று, டாக்டர் சுப்பராயன் அவர்களை அணுகி அவர்கள்வழித் தமது கோரிக்கையைக் கொடுத்தார். அவர்களும் அதனை ஆய்ந்து ஆவன செய்தார். பின்னர் கழகம் அறத்துக்கென ஒதுக்கிவரும் தொகைக்கு அரசு வருமான வரி விதிக்கவே, அதனை நீக்கி நலம் பெறுதற்கும் ஆட்சியாளரவர்கள் செய்த முயற்சிகட்கெல்லாம் துணை நின்ருர்கள். எப்போதும் ஆட்சியாளர் அவர்கட்கு மகிழ்ச்சியூட்டி வந்தவர்களுள் திரு. விசுவநாதம் அவர்களும் ஒருவராவார்.

மறைந்த இத்தகைய பண்பாளரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவர்தம் இன்னுயிர் இறையடியில் அமர்ந்து இன்புறுக என்று வாழ்த்துகிருேம்.

———

செய்திகளும் குறிப்புக்களும்

''பெருஞ்சித்திரனார் பாடல்கள் – கனிச்சாறு'' வெளியீட்டு விழா

''தென்மொழி'' ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாடல்கள் 'கனிச்சாறு' என்னும் பெயரில் மூன்று தொகுதிகளாக நூல்வடிவப் படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் வெளியீட்டு விழா தி. பி. 2010 துலை 25ஆம் நாள் (11—11—79) அன்று சென்னை அண்ணாசாலையிலுள்ள நடுவண் நூலகப் பேரரங்கில் நடைபெற்றது. முற்பகல் நிகழ்ச்சி நூல் வெளியீடு, திறனாய்வரங்கம் ஆகியனவாகவும், பிற்பகல் நிகழ்ச்சி சிறப்புரை பாராட்டுரை ஆகியனவாகவும் நடைபெற்றன.

முற்பகல் நிகழ்ச்சி அன்று காலை 9-30 மணி அளவில் தொடங்கியது. திருக்குறள் மணி பேரா. பர். க. த. திருநாவுக்கரசு அவர்கள் தலைமை தாங்கி நூலை வெளியிட்டார். வரலாற்றுப் பேராசிரியர் பர். கோ. தங்கவேலனார் அவர்கள் ஏற்புரை நிகழ்த்தினார்.

பெருஞ்சித்திரனார் பாடல்களில் தமிழ், இந்தியெதிர்ப்பு, இன எழுச்சி, நாட்டுணர்ச்சி, பொதுமை, இளைய தலைமுறை, காதல் என்னுந் தலைப்புகளில் திறனாய்வரங்கம் நடைபெற்றது. அறிஞர்கள் எழுவர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

பிற்பகல் நிகழ்ச்சியில் குழந்தை அங்கயற்கண்ணி வெளியீட்டு நூலில் சில பாடல்களை மெய்ப்பாட்டுடன் பாடினள். நூலையும் நூலாசிரியரையும் சிறப்புறப் பாராட்டி பர். சி. பாலசுப்பிரமணியனார், பர். ஔவை து. நடராசன், பேரா. இரா. மதிவாணன், பர். இரா. இளவரசு, சிலம்பொலி செல்லப்பனார், கு. வெ. கி. ஆசான், பேரா. மு. சதாசிவனார், பேரா. மறை திருநாவுக்கரசு ஆகியோர் உரையாற்றினர். திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார் வெளியீட்டாளர்க்கு நன்றி தெரிவித்தார். கோட்டை இராவணன் சொற்பொழிவாளர்கட்கும் வருகை தந்தோர்க்கும் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

நெல்லை, சுந்தர ஓதுவார் மூர்த்தி திருமுறை மன்ற இசையரங்கு

நெல்லை சுந்தர ஓதுவார் மூர்த்தி திருமுறை மன்றத்தின் சார்பில் 21—10—79 மாலை 4 மணி முதல் 6 மணி வரை திருநெல்வேலி, வடக்குத்தேர் வீதி—வர்த்தகர் சங்க மாடியில் தேவார இசைமணி சீர்காழி எஸ். திருஞானசம்பந்தன் குழுவினர் திருமுறை இசையரங்கு சிறப்பாக நடைபெற்றது. கவிஞர் மு. சு. சங்கர் நன்றி கூறினர்.

தேவி காமாட்சி திவ்யப் பிரபந்தம் வெளியீட்டு விழா

2—10—79இல் சென்னை வண்ணையம் பதியில் திருவொற்றியூர் நெடுஞ்சாலையிலுள்ள திருமண மாளிகையில், கவிரத்தினம், பக்த சிகாமணி எஸ் ஆர். கணபதி செட்டியார் அவர்கள் இயற்றிய தேவி காமாட்சி திவ்யப் பிரபந்தம் வெளியீட்டு விழா சிறப்பாக நடை பெற்றது. பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் தலைமை தாங்கினார். என். ஆர். வீரஜின்னு செட்டியார் வரவேற்புரை நிகழ்த்தினர். அருட்கவி ஸ்ரீதேவி கருமாரிதாசர் பிரபந்த நூலை வெளியிட்டார். ஆண்டார் குப்பம் ஸ்ரீ. வி. சண்முகசுந்தர சிவாசாரியர் அதனைப் பெற்றுக்கொண்டார். புலவர்கள், இலக்கியச் செல்வர்கள் பலர் பாராட்டுரை வழங்கினர்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(செல்வி சிலம்பு ருச-கூசுஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் கழக ஆட்சியாளர்	10	00
,, ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் கழக மேலாளர்	5	00
திருமதி ராஜம் கிருஷ்ணன், தாம்பரம்	100	00
திரு. ஆ. கந்தசாமி, சென்னை	50	00
,, Dr. இ. சுந்தரமூர்த்தி, சென்னை	25	00
,, ம. வழித்துணைவர், சென்னை	10	00
,, Dr. C. C. இராமச்சந்திரன், சென்னை	50	00
,, ஈரோடு தமிழன்பன், சென்னை	20	00
M/s T. S. Manian & Co, Tirunelveli	101	00
திரு. இரா. மதிவாணன், சென்னை	10	00
,, டி. இராஜகோபாலன், சென்னை	25	00
,, M. இத்ரீஸ், சென்னை	500	00
திருமதி கலாதாக்கர், சென்னை	25	00
திரு. R. நடராசன், கோவை	120	00
,, A. T. A. ஈஸ்வர், சென்னை	5	00
,, மு. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள் பாகனேரி	15	00
,, வ. தி. சங்கரலிங்கம், மதுரை	100	00
பேரா. தே. ஞானசுந்தரம், சென்னை	10	00
திரு. மா. சண்முகசுப்பிரமணியம், சென்னை	100	00
,, பூவண்ணன், சென்னை	10	00
,, R. சுந்தரம்பிள்ளை, சென்னை	10	00
,, க. குமாரவேல், வேலூர்	11	00
,, இரா. வ. சரோஜா, சென்னை-21	100	00

மதிப்புரை

தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வுத் தொகுப்பு :

[**ஆசிரியர் :** டாக்டர் ச. வே. சுப்பிரமணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-20. **விலை** ரூ. 15.00]

நாட்டுப் பாடல்கள் மக்களின் வாய்மொழி இலக்கியமாகும். ஒரு சிலர் அவற்றைத் தொகுத்து வெளியிட இதுவரை முயன்றனர். அண்மைக் காலத்தில் பல்கலைக் கழகங்களில் பாடமாக வைக்கப்பெற்ற பின் நாட்டுப் பாடல்கள் பற்றிய ஆய்வு நூல்கள் பெருகலாயின. பலர் தனிப்பட்ட முறையில் ஆய்வு நூல்கள் படைத்திருப்பினும் அறிஞர் பலர் கூடித் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வழங்கப்பெற்று வரும் நாட்டுப் பாடல்களைச் செவ்விய முறையில் ஆய்ந்து உலகத் தமிழாராய்ச்சி மன்றம் நடத்திய கருத்தரங்கில் படித்த கட்டுரைகளின் தொகுப்பே இந் நூல்.

நாட்டுப் பாடல்களின் அமைப்பு பற்றி இந் நூலில் விரிவாக ஆயப் பெற்றுள்ளது. மாவட்ட வாரியாகப் பல மாவட்டங்களில் வழங்கப் பெற்றுவரும் பாடல்கள்பற்றிய ஆய்வுரைகள் தனித்தனியாக இடம் பெற்றுள்ளன. இவை தவிர இருளர், மீனவர், காணிக்கர் போன்ற தனித்தனிக் குழுக்களால் பாடப்பெற்றுவரும் நாட்டுப் பாடல்கள் முதன்முறையாகத் தொகுக்கப்பெற்று ஆராயப்பெற்றுள்ளன. வில்லுப் பாட்டு, தோற்பாவைக் கூத்துப் போன்ற கிராமப்புறக் கலைகளும் ஆய்வு முறையில் தமிழறிஞர்கட்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டுப் பாடல்கள் பற்றி ஆய்வு செய்யும் அறிஞர்கட்கும் மாணவர்கட்கும் இது மிக அரிய தொகுப்பு நூலாகும். டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் அவர்கள் தமக்கேயுரிய தனித்திறனுடன் இந் நூலைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

பெருஞ்சித்திரனார் பாடல்கள்—கனிச்சாறு (மூன்று தொகுதிகள்)

[**ஆசிரியர் :** பாவலரேறு பெருஞ்சித்திரனார், **கிடைக்குமிடம் :** தென்மொழி பதிப்பகம், 51 அருணாசல ஆசாரி தெரு, சென்னை-600005. **விலை :** முதல் தொகுதி உரு 15-00, இரண்டாந் தொகுதி உரு 11-00, மூன்றாந் தொகுதி உரு 17-50.]

'தென்மொழி' ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகப் பல்வேறு சூழல்களில் இயற்றிய தனிப் பாடல்கள் தொகுக்கப்பட்டு நூல் வடிவில் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. முதல் தொகுதியில் தமிழ், இந்தியெதிர்ப்பு, இன எழுச்சி என்னுந் தலைப்புகளிலும் இரண்டாந் தொகுதியில் நாட்டுரிமை, பொதுமையுணர்வு, இளைய தலைமுறை என்னுந் தலைப்புகளிலும், மூன்றாந் தொகுதியில் காதல், இயற்கை, இறைமை, பிறது என்னுந் தலைப்புகளிலும் பாடல்கள் சிறப்புறப் பாகுபடுத்தி அமைக்கப்பட்டுள்ளன.

பாடல்கள் யாவும் தூய தனிச் செந்தமிழில் இலக்கண அமைதியோடு யாக்கப்பட்டுள்ளன; பாக்களும் பாவினங்களும் சந்தமிகு இசைப் பாக்களுமாக அமைந்துள்ளன; தமிழ்மக்களை எழுச்சியும் கிளர்ச்சியு முறச்செய்து முன்னேற்றப் பாதையில் முனைந்து நடையிடச் செய்யும் ஆற்றல் வாய்ந்தன.

இந் நூலின் சிறப்பிற்குக் கீழ்க்காணும் பாடலை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

"சேல்விழியே! முன்னைச் செழும்புலவோர் ஆக்கிவைத்த
நூல்வழியே செந்தமிழின் நுண்பெருமை கண்டாய்காண்!
கோல்வலியால்- ஆட்சிக் கொடுமையினுல் நம்மவரை
வால்பிடிக்கச் செய்தே வடவர் கொடுமொழியை
மேல்நிலையில் வைத்து மணித்தமிழைத் தாழ்த்தினர்காண்!
நூலிடையும் வாட நுதலும் நனிவெயர்ப்பக்
கால்குடைந்த கட்டில்மேல் கண்ணயர்ந்து தூங்குகின்ற
வேல்விழியே இக்கால் விழியேலோ ரெம்பாவாய்!"

அருணகிரிநாத அடிகள் வரலாறு (ஆராய்ச்சி)

[ஆக்கியோர்: நக்கீரன் வழியடிமை புலவர் பி.மா. சோமசுந்தரனுர், பாம்பனடிகளார் நூலகம், இராணிப்பேட்டை. விலை ரூ. 2-00]

பெரும் புகழ் பெற்ற திருப்புகழையும், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலிய நூல்களையும் அருளிச்செய்த அருணகிரி அடிகளாரின் வரலாற்றினையும், அவரைப்பற்றிய பிற ஆராய்ச்சிகளையும் அறிய விழைவோர்க்கு இந்நூல் தக்க வழிகாட்டியாக அமைந்துள்ளது.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

பதிவு எண் : M. 4899



20 ஆம் ஆண்டு நிறைவு விழா

மலர்

இம் மலரில், நூலகம் பற்றி அறிஞர்கள் வழங்கிய கருத்துரைகளும், ஆய்வாளர்களின் கருத்துரைகளும், இந் நாட்டிலுள்ள பல்வேறு நூலகங்களின் தோற்றம், வளர்ச்சி, பணிச் சிறப்புகள் அடங்கிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

நூலகங்கள், நூல்கள் இவைபற்றி உலகப் பேரறிஞர்கள் சிந்தியுள்ள சிந்தனை முத்துக்கள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. சுருங்கச் சொல்ல வேண்டுமானால் இஃதொரு தனி நூலாகவே மிளிர்கின்றது எனலாம்.

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் இம் மலர் எல்லா நூலகங்களிலுமிருந்து மணம் பரப்பவேண்டிய ஒன்றாகும்.

விலை ரூ. 10-00

கிடைக்குமிடம் : திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
79, பிரகாசம் சாலை, சென்னை-600 001.

அப்பர் அச்சகம், சென்னை-1.